உ

# அருள் ஒளி



## மகோற்சவ சிறப்பு மலர்

126


ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# மஞ்சத் திருவிழா 28-08-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# அருள் ஒளி

## ( மாதாந்த சஞ்சிகை )


ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

ஆடி – ஆவணி மாத மலர்
2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.


e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com


பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3


# பரம்பரையாக வாழ்ந்த குடிமனைகளை விற்பது வேதனைக்குரியது

மூதாதையர் பேணிக்காத்த வீடுகளை வெளிநாடுகளில் இருந்து வந்து திடீரென விற்பதும் வீடுகள் இடிக்கப்படுவதும் இன்று எம்மண்ணில் வழக்கமாகிவிட்டது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்துக் கட்டிய பாரம்பரியமான வீடுகளை விற்பது சர்வசாதாரணமாகிவிட்டது. பலபேர் வாழ்ந்த வீடு பூசை, திருமணம் எனப் பல சுபகாரியங்கள் நடந்த மனைகளை இன்றைய தலைமுறை அடியோடு அழிப்பதும், விற்பதும் கவலை தருகிறது. தம் சந்ததி பல நூறு வருடம் உலாவிய நிலத்தை மறக்கத் தயாராகிவிட்டார்கள். நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் நாடு கடந்து சென்றவர்களில் சிலர் மீண்டும் வந்து தம் மனைகளைத் திருத்திப் பாதுகாப்பது பெருமை தரும் விடயமாகும். பலர் தமது வீடு, விவசாய நிலம் அனைத்தும் விடுமுறை லீவில் வேகமாக வந்து விற்றுவிட்டு ஓடுகிறார்கள்.

“எம் தந்தையர் நாடு என்ற போதினிலே சக்தி பிறக்குது மூச்சிலே” என்று பாடிய பாரதியார் பா வரிகள் இன்று பொய்யாகிப் போவது கவலை தருகிறது. தாய் தந்தையைச் சரியாகக் கவனியாதவர்கள், அவர்களின் நிறைவுக் காலத்தில்கூட சமூகம் தராதவர்கள் இன்று அவர்கள் கண்ணை இமைபோல் காத்த உடமைகளை விற்றுப் பணம் பெற்றுச் செல்வது உள்ளத்தைத் நெருடுகிறது.

குலதெய்வங்கள், திருவிழாக்கள், கல்லுக்கிளறி உருவாக்கிய தோட்டங்கள், பயன்தரு மரங்கள் எல்லாமே எள்ளளவும் சிந்திக்காது கதை முடிப்பது பொறுக்கமுடியவில்லை. இந்த வீட்டில் யோகர் சுவாமிகள் தங்கினார். இந்த வீட்டில் பெரிய பரியாரியார் வைத்தியம் செய்தார், இந்த வீட்டில் சங்கடப்படலையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணையும், பலர் தினமும் உணவு அருந்திய பெருமையெல்லாம் இன்று முற்றுப்பெற்று வருகிறது. இனிமேல் நாமேன் வரப்போகிறோம். பிள்ளைகளுக்கு எங்களூர் சரிவராது என்று வசனம் பேசுபவர்கள் அதிகமாகிறது.

திருக்கோணமலையிலும் நகரப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்தவர்கள் பலர் தம்வீட்டை விற்றுவிட்டு வெள்ளவத்தையிலும் வெளிநாட்டிலும் குடியேறுகிறார்கள். மட்டக்களப்பிலும் இந்நிலை தொடர்கிறது. முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்த பண்பாட்டுப் பூமியில் இருந்து விடை பெறுபவர்கள் இன்னும் தொடர்கிறது. கடவுள்தான் காக்கவேண்டும்.

அன்புக்குரியவர்களே, பரம்பரையாக வாழ்ந்த வீடுகளை விற்றுவிட்டு ஓடாதீர்கள். மீண்டும் இம்மண்ணில் வந்து குடியேறுங்கள். சொந்த மண்ணை மறக்காதீர்கள். தாய் தந்தையின் ஆன்மாவைத் துன்புறுத்தாது அவர்களின் முயற்சிகளால் தேடியவற்றை பாதுகாக்க வாருங்கள். மலேசியா, சிங்கப்பூர் சென்றவர்கள் தாம் பிறந்த மண்ணுக்கு வந்து மண் வீட்டை மாளிகையாக்கிய வரலாறு உண்மை. சிந்தியுங்கள், சீரியவழியில் எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள். மாளிகை போல் இருந்த வீடுகளை விற்றுவிட்டு தற்போது விடுமுறைக்கு ஊர் வந்து ஹோட்டல்களிலும் வாடகை அறைகளிலும் நீங்கள் நிற்கும் காட்சி நிறைவு தருவதாக இல்லை. அவசரப்படாதீர்கள். தாய் நாடே எமக்கு இன்பந்தரும் பூமி.

– ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னருள் கிடைத்தால் நாம் உய்வமே!

பண்டிதர், கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்கள்

தெல்லிப் பழையுறை தெய்வமே! – துர்க்கா
தேவி யுன்னருள் கிடைத்தால்நாம் உய்வமே! (தெல்)

அல்லல் அகற்றிடும் அன்னையே! – உந்தன்
அடியிணை தொழுபவர்க் காகாததொன் றில்லையே! (தெல்)

பாம்புப் புற்றுகள் பற்றைகள் படர்ந்ததோர்
பழந்தமிழ் மண்ணைநீ பார்த்திடங் கொண்டாய்!
வேம்பும் பனைதென்னை விளங்கிடும் சூழலில்
விருப்புடன் சிறுகொட்டிற் கோயிலுனக் கமைத்தார்! (தெல்)

ஆரா வமுதென அடியரைக் காத்திடும்
பேரா யிரமுள பெருமாட்டி யுன்கோயில்
சீராய் வளர்ந்திடச் சிந்தனை செய்தோர்முன்
பாராள் யோகமுனி பக்குவம் சாற்றினார். (தெல்)

கைப்பிரம் பொன்றெடுத்துக் காசினிமீ தடித்தடித்துக்
கந்தபுரா ணம்படிக்கக் காரியம் நலமெனச்
செப்பிய மொழிகேட்டுச் செயற்படத் தொடங்கவே
இப்புவிமே லுயர்ந்து எழுந்ததுன் திருக்கோயில். (தெல்)

செல்வி தங்கம்மா சேவையால், தலைமையால்
செஞ்சொற் செல்வரின் சிறந்தநற் றொண்டினால்
பலவித அன்பர்கள் பரவிய பக்தியால்
பாரினில் துர்க்கா புரம்பேர் பெற்றதே! (தெல்)

கருவறை, மண்டபங்கள் கலைநிமிர் கோபுரம்
அருமறை யாகம விதிப்படி அமைந்தன
திருவருள் பாலிக்கத் தென்றிசைக் கோபுரம்
திடீரென எழுந்தது தேவியுன் கோயிலில். (தெல்)

வடதிசைக் கோபுர வண்ணம் கண்டிட
வள்ளன்மை கொண்டோர் எண்ணம் சிறந்திட
இடர்களைந் தன்பர்க் கின்னருள் ஈந்திடும்
ஈஸ்வரி யுன்னருளால் இறைபணி தொடங்கிற்றே. (தெல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரணங்க ளறியாத அன்னை துர்க்கையுன்
ஆலய மகோற்சவம் ஆவணித் திங்களின்
பூரணையிரு நாள்முந்திய திருவோணத் தீர்த்தமொடு
பொருந்திய பன்னிரு தினங்களும் பொலிவுறும். (தெல்)

சக்தியுன் இருப்பிடம் சகலர்க்கும் சமத்துவம்
பக்திகொண் டேதுதிப்பவர் பரிபாலனம் உன்வசம்
முக்திதரும் தாயும்நீ! மூலமுதல் முடிவும்நீ!
எத்திசையும் இறைஞ்சுகின்ற இறைவிதுர்க்கா தேவியே! (தெல்)

## ஆன்மீகக் கவிதைகள்

ஆலிலை மாதவன் அருகினில் அமர்ந்தவள்
அலைமகள் வடிவானவள்
காலத்தால் அழியாத காவியம் யாவிலும்
கலைமகள் என ஆனவள்

மாலையைச் சூட்டியே மகிழ்வாக ஆடிடும்
மகேசனின் உமையானவள்
நாளையப் பொழுதினில் நல்லவை ஆக்கிட
நல்சக்தி பல வடிவானவள்

மஞ்சளிலே விளையாடி வேம்பதனில் உறவாடி
மாவிளக்கினில் மருளாடுபவள்
கொஞ்சுகிளி குரலாடி கோவை இதழ் சிரிப்பாடி
கண்ணசைவில் மீனானவள்

அருளாடி மருளாடி ஆர்ப்பரிக்கும் அரிமாவின்
அரியணையில் அருளானவள்
விரும்பாத பெருக்கும் வினைகள் போக்குகின்ற
பேரன்பு தாயானவள்!

**கே. அசோகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்கையம்மன் காவடிச் சிந்து

கவிஞர் சோ. பத்மநாதன் (சோ.ப.) அவர்கள்

பொங்கு கங்கை திங்கள் தும்பை
பொன் பொலிந்த கொன்றை நஞ்சு
என்றிவை உவந்து வந்து சூடுவான் – எங்கள்
சங்கரன் பொன் அம்பலம் நின்றாடுவான் – அவன்
சாமம் ஓதுவன் நாமம் ஆயிரன்
சோம சேகரன் வாம பாகமும்
நெஞ்ச மும்இ டம்பி டித்த கன்னியே –மலை
நீலி என்று சொல்லு வதும் உன்னையே!


சங்கு கொம்பு ஜண்டை பம்பை
பொங்க அன்று செங்களங் கொள்
சண்டை என்று வந்து வெம்போர் ஆடினான் – அன்று
சந்த தங்கொண் டேது ணிந்து சாடினான் அந்த
மேதி யாகிய பாத காசுரன்
ஏது மேசெய்கி லாது வீழவும்
சிங்கமொன்றில் நின்ற துர்க்கா தேவியே
நம்பி வந்தேன் உன்பெ யர்கள் கூவியே


குங்கு மம்நி மிர்ந்த கொங்கை
செங்கரும்பு தங்கும் அங்கை
கொண்ட றங்கள் நன்கி யற்றும் கூடலாய் – என்
சந்த மொன்று செந்தமிழ்ப் பண் பாடலாய் – அகல்
ஞாலம் ஏழுமன் பால ளாவிடும்
கோல வாள விழி நீலியே சிவன்
நஞ்சையுண்ட கண்டம் அங்கை தீண்டினாய் – உனைத்
தஞ்சமென்று வந்தவர் முன் தோன்றுமாய்


பண்பு கொண்ட சிந்தையன்பர்
முந்தி வந்து நெஞ்சு நைந்துன்
தன்பதங்கள் கும்பிடுந்தண் தெல்லியூர்க் – கண்
என்பவங்கள் சிந்திடும் பொன் வல்லியே –
பாடு படல்கள் சூடு மாலைகள்
ஆடு காவடி கோடி கோடியென்(று)
எங்க ணும்சென் றன்பர் சொல்லக் கேட்கலாம் – அருள்
பொங்கு கின்ற வண்ணம் நேரிற் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைத் திருவிழா - 2017

சைவ சமயத்தவர்களின் உன்னத சொத்துக்களில் முதன்மையானவை திருமுறைகள். இறையருளைப் பெறுவதற்கும் இனிய வாழ்வை வளப்படுத்து வதற்கும் திருமுறைகள் பெருந்துணை செய்யும் என்பது அடியார்களின் நம்பிக்கை.

எங்கள் தேவஸ்தானத்தின் பெருந்தலைவராக விளங்கிய அன்னை கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி அவர்கள் திருமுறை மடம் அமைத்து திருமுறை காத்த பெருந்தகை. அத்திருமுறை மடத்தில் ஆண்டு தோறும் பன்னிரு திருமுறை ஓதுதற்கு வழியமைத்தவர். அம்மையாரின் வழிநின்று எமது தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் இப்பணியை தொடர்ந்து ஆற்றி வருகின்றார். சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் குருபூசையை முன்னிட்டு அம்மையார் தொடக்கி வைத்த பன்னிரு திருமுறைகள் வெளியீட்டு வரும் கைங்கரியத்தை மேற்கொண்டு வருகின்றார். அவரது முயற்சியால் தேவஸ்தானத்தின் உள்வீதியில் திருமுறை பாடிய அருளாளர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வருக்கு 2014இல் ஆலயம் அமைத்து வழிபாடாற்றும் பேறு கிடைத்தது.

அவ்வாண்டு முதல் வருடாந்த மகோற்சவத்தின் மூன்றாந் திருவிழாவை "திருமுறைத் திருவிழா" எனப் பெயரிடப்பட்டு நடைபெற்று வருவது திருமுறைக்கும் திருமுறை பாடிய அருளாளர்களுக்கும் பெருமை சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. இவ்வாண்டு உள்வீதி விழாவின்போது அம்பாளுடன் நால்வரும் பல்லக்கில் பவனி வர ஆலயத்தில் திருமுறை ஓதுபவர்கள் திருமுறை பாடிவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது. மேலும் வெளிவீதியுலாவின்போது திருமுறை மடத்தின் முன்பாக சங்கீத கலாநிதி நா. வீ. மு. நவரத்தினம் அவர்களும் அவரது மைந்தன் பரந்தாமன் அவர்களும் ஓதிய நால்வர் திருமுறைகள் ஆலயத்தின் எட்டுத் திக்கும் பேரொலி எழுப்பியது இத்திருமுறை விழாவிற்கு மேலும் அணி செய்தது.

– சு. ஏழூர்நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு வழிபாடு

கடவுள் ஒளிமயமானவர் என்பதே நமது வேதங்களில் காணப்படும் உண்மை. வேதநெறியில் வாழையடி வாழையெனத் தோன்றிய அருளாளர்களும் ஆண்டவனை அருளொளி வடிவாகவே கண்டனர். "அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்" என்று வள்ளலாரும் "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை" என்று மாணிக்கவாசகரும், "எரிகின்ற இள ஞாயிறன்ன மேனி", என்று அப்பரடிகளும் "ஒளிவளர் விளக்கே" என்று திருமாளிகைத் தேவரும் "ஒளிச்சுடரான மூர்த்தி" என்று வைகுண்ட சுவாமியும் இறைவனைப் பற்றி அருளியிருக்கும் அருள்மொழிகள் இந்த உண்மையை நமக்குத் தெளிவுபடுத்தும்.

நமது சாதாரண புலனறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால், அருட்பெருஞ் சுடராய் நின்று எங்கும் அருள்பாலிக்கும் தெய்வத்தின் திருவுருவ வழிபாடே திருவிளக்கு வழிபாடாகும்.

கடவுள் ஒளிவடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே திருக்கார்த்திகைத் திருநாள். இல்லக விளக்கான எங்களுக்கே இவ்விழா முக்கியமானது. இதனை "தையலார் கொண்டாடும் தொல்கார்த்திகைத் திருநாள்" என்று ஞானசம்பந்தர் பெருமான் கூறியுள்ளார். ஆகவே திருவிளக்கு வழிபாடும், பெண்களுக்கு உரித்தான வழிபாடாகும். ஆண்பாலாரும் செய்யலாம்.

## திருவிளக்கு வழிபாட்டின் சிறப்பு

இருள் துன்பந்தருவது. ஒளி இன்பந் தருவது. ஒளியின்றி உலகம் ஏது? வாழ்க்கை ஏது? புற இருள் போக்குவது ஒளி, அக இருளைப் போக்குவது அருள் ஒளி உணர்வு. இருளாகிய துன்பம் நீங்கி, அருளாகிய இன்பம் நிறைந்திட திருவிளக்கு வழிபாடு செய்கிறோம். கேணி நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து நாம் அருந்தி தாகம் தீர்த்துக் கொள்வது போன்று "அருட்பெரும் ஜோதி, தனிப்பெரும் கருணை" ஆகிய தெய்வத்தின் திருவருளை திருவிளக்கில் ஏற்றி வழிபட்டு நாம் துன்பத்தைத் தீர்த்துக் கொள்கின்றோம்.

## பயன்கள்

திருவிளக்கு வழிபாடு செய்வதால் நம் வாழ்வில் தூய்மையும் தெய்வத் தன்மையும் பெருகும். சஞ்சலமும் வறுமையும் நீங்கி சாந்தியும் வழமையும் நிறையும். தாய்மார்கள் தினந்தோறும் தங்கள் இல்லங்களில் அந்திமாலையில் ஆதவன் (சூரியன்) ஒளி மறைந்ததும் திருவிளக்கேற்றி மலர்கள் தூவி குடும்பத்தில் எல்லோரும் கூடி மண்டியிட்டு வழிபடவேண்டும். அஷ்ட லட்சுமிகளும் அங்கே இருந்து கொண்டு நமக்கு வேண்டிய எல்லா நலன்களையும் அருள்வார்கள். திருவிளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடு தினந்தோறும் நடைபெறும் இல்லங்களில் தெய்வ சாந்நித்யம் பெருகுவதால் பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஒன்றும் அங்கே அணுகாது.

ஆலயங்களில் பெண்கள் ஒன்றுகூடி முறைப்படி ஆளுக்கொரு திருவிளக்கேற்றி வரிசையாக வைத்து வழிபடும்போது ஆன்மீக ஒருமைப்பாடும் அன்புணர்வும் மலரும். ஆலயத்தில் அருளலைகள் நிறைந்து ஆலயத்தின் உள்ளும் புறமும் அவ்வூரெங்கும் பரவி நிற்கும். அதனால் அவ்வூரில் தீய பிணிகளும், தீய வியாதிகளும் விலகி அன்பும், அமைதியும் செல்வமும், சிறப்பும் வளரும். ஆகவே நம் வீடு நலமும், நாட்டு நலமும் வளர நம் இல்லங்களில் பொதுவாகவும், ஆலயங்களில் ஒன்றுகூடி சிறப்பாகவும் திருவிளக்கு வழிபாடு செய்ய முன்வரவேண்டும்.

## திருவிளக்கின் தத்துவம்

**அடிப்பாகம்** : இந்தப் பீட பாகம் மலர்ந்த தாமரைப்பூ போல் அகன்று வட்டமானதாக இருப்பதால், தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரம்மதேவனைக் குறிக்கின்றது.

**கீழ்த்தண்டு பாகம்** : இஃது தூண் போன்று உயரமாக இருப்பதால், ஓங்கி வளர்ந்து பூமியை ஓரடியாலும் ஆகாயத்தை ஓரடியாலும் அளந்த நெடுமாலாகிய மஹா விஷ்ணுவைக் குறிக்கும்.

**அகல்விளக்கு** : தண்டுக்கு மேலே அகல் போல் நெய் ஊற்றப்பட்டுள்ள பாகம் சிவனார் கங்கையைச் சடையுள் வைத்திருப்பதைப்போல் இருப்பதால், இப்பாகம் உருத்திரனைக் குறிக்கின்றது.

**திரியிடும்கண்** : திரி எரிவதற்குரிய மூக்குகள் ஐந்தும் ஐந்துமுகமுடையார் மஹேஸ்வரனாகக் கருதப்படல் வேண்டும்.

**மேல் தண்டு** : அகலின் மேல் கும்பகலசம் போல் உள்ள உச்சி பாகம் சிவலிங்கம் போல் இருப்பதால் ரூபாரூபத் திருமேனியுடைய சதாசிவனாகப் பாவிக்கத் தக்கது.

**எண்ணெய்** : அகல்பாகம் முழுவதும் பரவியுள்ள நெய்யானது உருவமின்றி எங்கும் பரவி நிற்கும் நாதத்துவத்தைக் குறிக்கும்.

**திரி** : விந்து தத்துவத்தை அல்லது வெண்மை நிற ஒளியை விளக்குகின்றது.

**சுடர்** : (தீப்பிழம்பு) இலக்குமி தேவியின் சொரூபமாகக் கருதப்படுகின்றது.

**ஒளி** : பிரகாசமாக இருப்பதால் இது ஞானமயமான சரஸ்வதி தேவியின் சொரூபத்தைக் குறிக்கும்.

**சூடு** : எரிக்கும் சக்தியானது அழிக்கும் சக்தியாகிய உருத்திர ராணியின் சொரூபமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துவிளக்கில் அழகாக அமைந்திருக்கும் வேலைப்பாடுகள் எல்லாம் கணபதி, முருகன், ராமர், கிருஷ்ணன் ஆகிய மூர்த்தங்களைக் குறிக்கும். எந்தத் தெய்வ பூசை செய்யவேண்டுமானாலும் குத்துவிளக்கையே அந்தந்தத் தெய்வமாகக் கருதி, அந்தந்தத் தெய்வத்திற்குரிய அர்ச்சனை, பூசை, நைவேத்தியம், முதலியனவற்றைச் செய்து வழிபடலாம். எனவே திருவிளக்கை நன்றாக விளக்கி சுத்தப்படுத்தி சுத்தமான இடத்திலே வைக்கவேண்டும். சந்தனம், குங்குமப் பொட்டுகள் இட்டு, மாலைகள் சாற்றி வழிபடுவது நல்லது.

குறிப்பு : திருவிளக்கைச் சுத்தம் செய்யும்போதும், அலங்காரம் செய்யும் போதும் இஷ்ட தெய்வ நாமங்களை மனதில் ஜெபித்துக்கொண்டே செய்யவேண்டும்.

# திருவிளக்கு அகவல்


**விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன்பிறப்பே**
**ஜோதிமணி விளக்கே சீதேவி பொன்மணியே**
**அந்தி விளக்கே அலங்கார நாயகியே**
**காந்தி விளக்கே காமாட்சி தாயாரே!**
**பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சு திரிபோட்டு**
**குளம் போலே எண்ணை விட்டு கோலமுடன் ஏற்றிவைத்தேன்**

**ஏற்றினேன் நெய் விளக்கு எங்கள் குடி விளங்க**
**மாங்கல்ய பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா**
**சந்தான பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா**
**அல்லும் பகலுமென் அண்டையில் நில்லுமம்மா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



## ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள்
### ( குருபீடாதிபதி, மகாதேவா ஆச்சிரமம், கிளிநொச்சி )

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் உள்ள மகாதேவா ஆச்சிரமத்தின் குரு பீடாதிபதியாக நீண்டகாலம் ஆன்மீகப்பணியாற்றிய ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகள் மகா சமாதியடைந்த செய்தி குறித்து ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன்.

தவத்திரு யோகர் சுவாமிகளின் வேண்டுகோளுக்கமைய இணுவில் வடிவேல் சுவாமிகள் கிளிநொச்சிப் பகுதியில் குடியேறிய மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஜெயந்தி நகரில் குடிலமைத்து தொண்டாற்றினார். அக்குடிலே "மகாதேவா" ஆச்சிரமம்" என்ற நாமத்தோடு இன்று பெருவிருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது. வடிவேல் சுவாமிகளால் உருவாக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமத்தை அவரது சமாதிக்குப் பின் நீண்ட காலம் நிர்வகித்த பெருமை இன்று சமாதியடைந்துள்ள ஸ்ரீமத் கணேசானந்த சுவாமிகளைச் சாரும். போர்ச்சூழலுக்கு மத்தியில் கிளிநொச்சி மாவட்டத்தில் சைவ சமயத்தின் காவலராக இவர் ஆற்றிய தொண்டு மறக்கமுடியாது. ஆதரவற்ற பல குழந்தைகளுக்கு நிழலாக விளங்கிய இப்பெருமகனாரின் பிரிவு மிகுந்த வேதனை தரும் செய்தியாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பலருக்கு சமய தீட்சை வழங்கி நற்கருத்துக்களை எடுத்துரைத்து வழிகாட்டியாகத் திகழ்ந்த இப்பெரியாரின் இடத்தை இன்று நிரப்புவதற்கு யாருமில்லை. தள்ளாடும் வயதிலும் இறுதிவரை பணியாற்றிய பெரியாருக்கு எனது இதய அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றங்கரையானின் அன்புநிலை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழிலே எழுந்துள்ள பக்திப் பாடல்கள் இறைவன் மீது அவனது அன்பர்கள் கொண்டிருந்த அன்பின் தன்மையை விளக்குகின்றன. தமிழிலக்கியங்களிலே அப் பாடல்கள் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன. அப்பாடல்கள் எழுந்த காலப்பகுதி பக்திக்காலம் என்றும் கூறப்படுகின்றது. சைவம், வைஷ்ணவம் என்ற இரு மதங்களைச் சேர்ந்த அடியார்களும் தமது பக்தி அனுபவத்தைப் பல பாடல்களிலே புலப்படுத்தியுள்ளனர். அவை பிற்காலத்திலே தொகுக்கப்பட்டுப் பன்னிரு திருமுறைகளெனவும் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் எனவும் அழைக்கப்படுகின்றன. ஆழ்வார்களும் சிவனது குணங்களிலே ஆழமான ஈடுபாடு கொண்ட நாயன்மாமார்களும் தமது அனுபவங்களைப் பாடல்களிலே விபரித்துள்ளனர். அவர்களது தனித்துவமான அன்பு நிலையும் மனவுணர்வுகளும் பிறராலும் அறியப்பட அப்பாடல்கள் பெரிதும் உதவின.

தமிழ்நாட்டிலே முதல் முதலாகத் தனது அன்பு நிலையையும் மனவுணர்வையும் வெளிப்படுத்திக் காட்டியவர் காரைக்காலம்மையாராகும். இயற்கைத் தோற்றத்தையே இறைவனாகக் கண்டவர் அவர்.

காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையெ போன்றிலங்கும் வெண்ணீறு – மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவர்க்கு
வீங்கிருளே போலும் மிடறு".

(அற்புதத் திருவந்தாதி : 65)

என்னும் காரைக்காலம்மையாருடைய பாடல் அவர் இறைவன் மீது கொண்ட பேரன்பினால் எதையுமே இறைவனாகவே காண்கின்ற நிலையை அடைந்தமையை விளக்குகின்றது. அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற நாயன்மார்கள் சிவனைத் தமது அன்பின் ஆழத்திற்கேற்ப பல்வேறு நிலைகளிலே கண்டுள்ளனர். இவர்களது வயது நிலையும் தனிப்பட்ட அனுபவங்களுடைய திருவாசகப் பாடல்களிலே இறைவனை வழிபடும்போது உடலிலே தோன்றும் மாற்றங்களையும் காட்டியுள்ளார். மனம் கனிந்து இறைவனே தஞ்சமென நினைந்து வழிபடுகையில் அந்த உணர்வு நிலைக்கேற்ப உடல் நிலையும் மாறுபடுகின்றது. மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் மணிவாசகர் இறைவனை வழிபடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்**
**கைதான் நெகிழவிடேன் உடையா யென்னைக் கண்டுகொள்ளே.**

**திருச்சதகம் : 5:1**

உடலெங்கும் மெய்சிலிர்த்து நடுநடுங்கி, கைகளைச் சிரமேற்குவித்து வைத்து, கண்களின்றும் கண்ணீர் வழிய, மனம் உருகி, வாய் முருகா முருகா என்றியம்ப நின்று அன்பர் வணங்கும் காட்சியைச் சந்நிதி கோயிலிலே காணலாம். ஏனைய கோயில்களிலே இவ்வாறு மனங்கசிந்து வழிபடுவோர் குறைவு. ஆற்றங்கரையான் எழுந்தருளியிருக்கும் கோயில் அன்பர்கள் மனதிலே நெருக்கமான உணர்வைத் தோற்றுவிக்கின்றது. கட்டடங்கள் சூழப்படாத வெட்டவெளியான கோயில் அமைப்பும், மந்திரமில்லாத பூசை முறையும் அன்பர்களது எண்ணத்திலே ஆற்றங்கரையானை அணுகுவது எளிது என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளன. பிராமணரோ, குருக்களோ மந்திரஞ்சொல்லி முருகனை அர்ச்சிப்பதில்லை. மனத்தாலே அவனை அர்ச்சிக்கும் சந்நிதி கோவிற் பூசகர் ஒரு சாதாரணமான மனிதனாகவே மக்களுக்குத் தோற்றுகிறார். வாயைக் கட்டி அவர் கர்ப்பூரத்தைக் காட்டும் கோலம், இந்த வழிபாட்ட முறை சகலரும் செய்யக்கூடியது என்பதைக் காட்டுகின்றது. விபூதியை நிறைத்த தட்டத்திலே கர்ப்பூரத்தை எரித்து அதனாலே முருகனை அர்ச்சிக்கும் பூசகரது கோலம்; மலர்களை எடுத்து மந்திரமோதாமல் தூவும் காட்சி முருகனின் அண்மை நிலையை அன்பர்க்குக் காட்டுகின்றன. ஏனைய தீப தூபங்கள் தற்போது சந்நிதியின் பூசை முறைகளிலே புகுந்து கொண்டாலும் ஆரம்பத்தில் கர்ப்பூர ஆரத்தி மட்டுமே செய்யப்பட்டது.

இந்த நெருக்கமான நிலையினால் மக்கள் மனத்தினுள் முருகனை நெருங்கி நின்றனர். தாமே தமது குறைகளை எடுத்தியம்பினர். மனத்துயரம் போகக் கண்ணீர் விட்டு அரற்றினர். தமது சோகக் குரல் முருகனின் திருச்செவியில் விழும் என்று திடமாக நம்பினர். தொண்டைமானாற்றிலே முழுகி எழுந்த கோலத்திலேயே பல பெண்கள் ஆற்றங்கரையானின் வீதி மணலில் அடி அழித்து வணங்குவர். அந்த அடி அழிப்பு நிலை அவனடிகளையே தொடர்கிறோம் என்ற எண்ணத்தைச் செயற்படுத்துவதாயிருக்கும். உச்சியிலேயே கரம் வைத்து ஓலமிட்டு அழும் அன்பர் ஒருபால்; ஒன்றுமே பேசாமல் வேலையே வெறித்து நோக்குவார் இன்னொருபுறம்; கரங்களைத் தட்டியே ஆடிப்பாடுவார் சிலர்; மறுபுறம் விரித்த தலையோடு வீற்றிருப்பார் சிலர். துள்ளித் துள்ளி ஆடுவார் சிலர். சிரித்து சிரித்து முருகனோடு வார்த்தையாடுவார் பலர். இவர்கள் எல்லோரையும் ஒருசேரப் பார்க்கும்போது சந்நிதி கோயிலின் அற்புதமான சூழல் அனைவரையுமே கவர்ந்துவிடும். அன்பர்களை மனநோயாளர்களென்று ஒருவரும் கருதுவதில்லை. அவர்கள் கோலங்களைக் கண்டு யாவரும் கேலி செய்வதில்லை. இவ்விடத்தில் மணிவாசகரது திருவாசகம் ஒன்றும் இதே நிலையை விளக்கியிருப்பதை ஒருசேர எண்ணுவது பொருத்தமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார் திரண்டு திரண்டுன் திருவார்த்தை**
**விரிப்பார் கேட்பார் மெச்சுவார் வெவ்வே றிருந்துன் திருநாமம்**
**தரிப்பார் பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார் அவர் முன்னே**
**நரிப்பாய் நாயேன் இருப்பேனோ நம்பி இனித்தான் நல்காயே**

**கோயின் மூத்த திருப்பதிகம் : 9**

இறையன்பை உணர்ந்தவர்கள் அவன் நினைவிலே அவனைப்பற்றியே பேசுபவர்களாகவும், அவனைப் பேசுபவர்களின் வார்த்தைகளைக் கேட்பவர்களாகவும், அவனைப் போற்றிப் பாடுபவர்களாகவுமிருப்பர். அத்தகைய அன்பர் கூட்டத்திலே இறையன்பை உணராத மூடர்கள் சென்றால் என்ன செய்வார்கள்? கேலி செய்ய முற்படுவார்கள். ஆற்றங்கரையானின் அன்பை உணராதவர்களும் அப்படித்தானிருப்பார்கள். முருகன் புகழ்பாடிப் பேசித்திரிபவரைப் பைத்தியக்காரர் என்றே விமர்சிப்பர்.

சந்நிதியிலே பூசை நேரப்போது பறை ஒலிக்கப்படும். அந்தப்பறை ஒலி அன்பர்களைப் பரவசப்படுத்தும். நிறைந்த கர்ப்பூர ஒளியிலும், செறிந்த புகைமண்டல நடுவிலே மின்னல்போல ஒளிரும் வேலின் தோற்றத்தைக் கண்டு பரவசப்படாதார் மனிதர்களேயன்று. பறையொலிக்கேற்பப் பலர் உரு ஆடுவர். இருந்தபடியே அவர்கள் தலையை மட்டும் சுழற்றி ஆடுவர். இடையிடையே கூக்குரலிடுவர். இத்தகையோரைப் பேய்பிடித்தோர் என வருணிப்பவரும் உண்டு. பறை ஒலியின் தாளலயத்திற்கேற்பத் தலையசைத்து ஆடுபவர்கள் தாமிருக்கும் சூழலை மறந்தவர்கள். வேலன் வெறியாட்டிலே ஒன்றிவிட்டவர்கள். ஆடலின் இடையே குரவையொலி செய்கின்றனர். இது பண்டைத்தமிழ் வழிபாட்டு மரபு. மதுரைக்காஞ்சி இதனை வர்ணித்துள்ளது.

**"அருங்கடி வேலன் முருகொடு வளைஇ**
**அரிக் ட்டின்னியங் கறங்க நேர்நிறுத்துக்**
**கார்மலர்க் குறிஞ்சி டிக் கடம்பின்**
**சீர்மிகு நெடுவேட் பேணித் தழஉப் பிணையூஉ**
**மன்று தொறும் நின்றகுரவை சேரிதோறும்**
**உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ"**

அச்சந்தரும் தோற்றமுடைய வேலன் இத்தீங்கு உமக்கு முருகனால் வந்ததென்று கூறும் தன் சொல்லாலே வளைத்துக்கொண்டு இனிய இசைக் கருவிகள் முழுங்க, முருகனை முன்னிலையாக்கி, குறிஞ்சிப் பூசைக் கடப்பமரத்திலே கூடி, அங்கு புகழ்பெற்ற முருகனைப் பாடிப் பரவி வழிபடுதலால் மகளிர் தழுவிக் கைகோர்த்து மன்றங்கள் தோறும் நின்று ஆடும் குரவைக் கூத்தும் சேரிகளிடத்தே புனைந்துரைகளும், ஆடல் பாடல்களும் கலப்பதனால் ஒரே ஆரவாரமாயிருக்கின்றது. "இந்த நிலையைத்தான் ஆற்றங்கரையில் அருகுள்ள சந்நிதியிலும் பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய அன்பர்களது நிலையும் வழிபாட்டு முறையும் சந்நிதி கோயிலின் தோற்றப் பழமையைக் காணவும் உதவுகின்றன. முருக வழிபாடு மிகப் பழைய நிலையிலே ஈழத்திலே பேணப்பட்டு வந்ததையும் உணர்த்துகிறது.

பூசகரை விழுந்து வணங்கி விபூதி பெறுவதும், சிலருடைய வாயிலே பூசகர் விபூதியை இட அவர்கள் கண்கூடி நிற்பதும் சந்நிதியிலே நாள்தோறும் காணும் காட்சிகள். இத்தகைய அன்பர்கள் பலர் சாதி நிலையிலே குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர். சந்நிதியைக் கீழ்சாதியினரின் வழிபாட்டுத்தலம் என்றும் வர்ணித்தனர். அன்னதானச் சோற்றுக்காக அலையும் ஏழைகளெனக் கூறினர். ஆனால் அவர்களின் அன்பு நிலையை யாருமே அறியவில்லை. கண்ணப்பரின் அன்பையுணராதவர்கள் பலர் உளர். தெய்வமென்பதோர் சித்தமுண்டாகில் அவர் செயல் எப்படியாகும் என்றும் பாரதியார் கூறியுள்ளார். பக்தியுடையார் காரியத்திற் பதறார். மிகுந்த பொறுமையுடன் வித்து முளைக்கும் தன்மைபோல மெல்லச் செய்து பயனடைவாராம். முருகனையுணர்ந்தவர் செயல்கள் மற்றவர்க்குச் சிரிப்பாய் இருப்பினும் முருகன் அன்பர்கள் அதைப்பற்றி எள்ளளவும் கவலைப்படுவதில்லை. இருகாதிலும் செவ்வரத்தம் பூச்சூடி, கழுத்திலும் மலர்மாலை அணிந்து, கையிலே கோலொன்றுடன் ஆடிப்பாடும் அன்பர்களைக் காணும்போது வேலன் வெறியாடும் கோலம்தான் நினைவுக்கு வரும். இந்த அன்பு நிலையை ஆய்வுப் பொருளாகப் பார்க்கவேண்டியதில்லை. அறிவாற்றல் கூடும்போது பந்தங்கள் விலகிவிடும். முருகனை நன்கு உணர்ந்தவர் அவன் கோயிலிலே குடியேறிவிடுவர். தமது உடல் அலங்காரங்களிலே கருத்துக்கொள்ளார். பல பெண் அன்பர்கள் தமது நீண்ட அழகான கூந்தலையே மொட்டையடித்துவிடுவர். ஆண்கள் முகசவரம் செய்யாமல் தாடி வளர்ப்பர். ஆற்றங்கரையிலே சடைமுடியோடு உலாவும் அவரைத் துறவிகளாக நாம் காண்கிறோம். முருகன் அன்பின் தன்மையுணர்ந்து அதைமட்டுமே சிந்தித்து வாழும் அன்பர்கள் அவர்கள். முருகனை அண்மித்து வாழ்பவர்கள்.

சந்நிதியிலே நடைபெறுகின்ற நேர்த்திக்கடன்கள் அன்பர்களின் இன்னொருவகையை அறிய உதவுகின்றது. முருகனிடம் இன்னது நான் செய்வேன் என்று நேர்ந்து பின்னர் அதனைச் செய்து முடிக்கும் உறுதிநிலை எல்லோருக்கும் உரியதன்று. அநேகமாக நோயுற்றவர்கள் நோய் குணமடைந்தால் காவடி, அல்லது பாற்செம்பு அல்லது கற்பூரச்சட்டி எப்படுதாக நேர்து முதற்காணிக்கையாக ஒரு ரூபா பணத்தை மஞ்சட்துணி ஒன்றிலே முடிந்து நோயாளியின் கையில் கட்டிவிடுவர். நோய் குணமானதும் நேர்த்திக்கடனை உடனடியாக நிறைவேற்றுபவரும் உண்டு. சிலர் பொருளாதார வசதிக் குறைவால் சற்றுக் காலம் தாழ்த்தி நிறைவேற்றுவதும் உண்டு. குறிப்பிட்ட நாளிலே செய்வதாக நேர்ந்திருப்பின் அந்த நாளிலேயே அதை நிறைவேற்றுவர். நேர்த்தியைச் செய்யப் பொருள் வசதியற்றவர்கள் 'மடிப்பிச்சை' எடுத்தும் அதை நிறைவேற்றுவர். சந்நிதியில் அன்னதானம் கொடுப்பேன் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்திக்கடன் வைத்தவர் வீடுவீடாகச் சென்று மடியேந்தி நிற்பவர். அந்தந்த வீட்டவர்கள் மடியிலே போடுகின்ற அரிசியைச் சேர்த்து எடுத்துப்போய் சந்நிதி மடத்திலே அன்னதானம் வழங்குவர். அன்னதானத்தினத்தன்று குறிப்பிட்ட நேர்த்திக்குரியவர் மொட்டை வழிக்கும் வழக்கம் உண்டு.

அன்னதானக் கந்தனின் சந்நிதியிலே குழந்தைகளுக்குப் பால் பருக்குவதாகவும் சோறு தீற்றுவதாகவும் சில பெற்றோர் நேர்த்தி வைப்பதுண்டு. குறிப்பிட்ட நாளன்று குழந்தையைக் கோவிலுக்குக் கொண்டுவந்து மொட்டை வழித்து, தொண்டமானாற்றில் முழுக வார்த்து கோயிற்பூசை முடிய சந்நிதானத்திலேயே ஆற்றங்கரையான் அமுதான மருந்தை, அன்னத்தைக் குழந்தைக்குப் புகட்டுவர். சிலர் பால்பருக்குவர். தாய்ப்பாலிலிருந்து பசுவின் பாலுக்குக் குழந்தையுணவை மாற்றும்போது ஆற்றங்கரையானுக்கும் பாலும் இளநீரும் கொணர்ந்து அபிஷேகம் செய்து பால்பருக்கும் சடங்கை நிறைவேற்றுவர்.

குழந்தைகளின் கையினாலே கோவிலுக்கு அள்ளு காசும் தென்னம்பிள்ளையும் கொடுக்கும் வழக்கமும் உண்டு. பணத்தைச் சில்லறையாக மாற்றி ஒரு தட்டத்திலே போட்டு குழந்தையின் கைகளால் அதிலிருந்து மூன்று முறை அள்ளிப் பூசகரிடம் கொடுப்பர். தென்னம்பிள்ளையும் குழந்தையின் கையில் கொடுத்தே கொடுப்பிக்கப் படும். அன்றைய தினமும் குழந்தைக்கு மொட்டைவழித்து நீராட்டி தலையிலே சந்தனத்தை நிறையப் பூசிவிடுவர்.

காவடி எடுக்கும் நேர்த்தி ஆண்களாலேயே செய்யப்படும். காவடி எடுத்து முடிய அவர்கள் மீண்டும் கோயிலைச் சுற்றி அங்கப் பிரதட்சணை செய்வதும் உண்டு. திருமணமான தம்பதியர் ஆற்றங்கரையானிடம் செல்லும்போது மாவிளக்குப் போடும் வழக்கம் உண்டு. சந்நிதிகோயிலிலே அன்பர்கள் தங்கள் வாழ்நாளினது நன்மையான தினங்களை ஆரம்பிக்கின்றனர். அவன் முன்னிலையிலே செய்யும் காரியங்கள் யாவும் விக்கினமின்றி நின்று நிலைக்கும் என நம்பினர். இன்று புதிய வாகனங்களை வாங்குபவர்கள் கூட வெள்ளோட்டத்தை ஆற்றங்கரையானின் வீதியிலேயே நடத்துகின்றனர்.

'செல்வச் சந்நிதி' என்ற பெயரும் அன்பர்களின் அன்பு நிலை அங்கு பரவக் காரணமாயிற்று. சந்நிதியானிடம் குறையிரப்பின் எல்லாம் தருவான். நிலவளமும், கடல் வளமும் சேருமிடத்தில் அமர்ந்திருக்கும் அவன் செல்வத்திற்கு ஏது? குறை. அருட்செல்வத்தை அவன் வாரிவழங்க, அன்பர் அது பெற்றுப் பொருட்செல்வம், கல்விச் செல்வம், வெற்றிச் செல்வம் என்பவற்றைப் பெறுகின்றனர். வெள்ளிக்கிழமை தோறும் கால்நடையாகவேனும் சென்று வேலவனைப் பணிபவர் பலர். அதிகாலை இருள் பிரியுமுன்பே சென்று தொண்டைமானாற்றில் முழுகி எழுந்து முருகனை வலம்வரும் அன்பர்கள் பலர். சாதாரண நாட்களிலும் சந்நிதியில் அன்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திற்கு குறைவில்லை. அங்கு நடைபெறுகின்ற அன்னதானத்தினால் கோயிலில் நிலையாகத் தங்கிவிட்ட அன்பர்கள் தொகையும் இக்காலங்களிலே அதிகமாகவே இருந்தது. யாருமற்ற அநாதைகளும், தொழில்செய்து பிழைக்கமுடியாத அங்கவீனர்களும் ஆற்றங்கரையான் சந்நிதியிலே நிரந்தரமாகத் தங்கியிருந்தனர். அவர்கள் தம்மால் இயன்ற கோயிற் தொண்டுகளைச் செய்தனர்.

சந்நிதியின் உற்சவ காலத்திற்கூடும் அன்பர்களில் வர்த்தகர்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். யாழ்ப்பாணத்திற்கு கிராமப்புற மக்களுக்கு, கோயில் உற்சவ காலங்களே பொருட்களைக் கொள்வனவு செய்யும் காலங்களாயுமிருந்தன. பெட்டி, பாய், பாத்திரம், அலங்காரப் பொருட்கள், தின் பண்டங்கள் என்பன கோயிலிலே விற்கப்பட்டன. பல சிறிய கடைகள் கோயில் வீதியெங்கும் அமைக்கப்படும். தூரத்து கிராமங்களில் வசிப்போர் மாட்டுவண்டிகளிலும், கால்நடையாகவும் வந்து பொருட்களை வாங்குவர். ஓராண்டுக்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்வர். முன்னர் சுவைத்திராத நகரப்புறத்து தின் பண்டங்களைச் சுவைத்து மகிழ்வர். திருவிழாவிலே பொருட்கள் வாங்குவதற்கென சிறுவர் உண்டியல் சில்லறைக் காசுகளைச் சேகரித்து வைப்பர். பெரியவர்கள் உழைப்பின் ஒரு பகுதியை ஒதுக்கி வைப்பர். கோயில் வீதிக் கடைகளில் வியாபாரம் சுறுசுறுப்பாகவே இருக்கும். மேற்கு வீதியிலே வண்ணப் பாய்களும், கடகங்களும், அடுக்கு மூடல்களும் மலைபோல் குவிக்கப்பட்டிருக்கும். தீவுப்பகுதிகளில் இருந்து கூட பன்னவேலைப் பொருட்கள் விற்பனைக்கு வருவதுண்டு. இந்த விற்பனைப் பொருட்களிலே குறிப்பிடக்கூடிய இன்னொரு பொருள் கடலை, கச்சானாகும். பலவகையான கடலைகள் விற்கப்படும். கச்சான் கடலை, கொண்டற்கடலை, சிந்தாமணிக்கடலை, சோளப்பொரி என்பவற்றை பல கடகங்களிலே பரப்பி வைத்துக்கொண்டு பெண்களே வியாபாரம் செய்வர். கச்சான் கடலையை “மணிலாக்கொட்டை” என்றும் அழைப்பர். அது மருவி மள்ளாக்கொட்டை என்றும் வழங்கப்பட்டது. இந்தக் கடலை வியாபாரத்தை பெண்களே பெருமளவு செய்தனர் என்பதற்குப் போதிய ஆதாரம் உண்டு. பெண் கடலை வியாபாரிகளுக்கு மொத்த வியாபாரம் செய்த கரவெட்டியைச் சேர்ந்த பெண் வியாபாரி ஒருவர் தந்த தகவல்கள் இதற்குச் சான்றாகும். இவருக்குத் தற்போது வயது 63. அவர் தந்த தகவல்கள் –

“எனது வீட்டிலிருந்து சொந்தக் கடையில் நடைபெற்ற பலசரக்கு வியாபாரத்தில் கடலையும் ஒரு பொருளாக பெண்கடலை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்கப்பட்டது. 40 வயது தொடக்கம் 70 வயது வரையுள்ளவர்கள், ஏறத்தாழ 30 பெண் கடலை வியாபாரிகள் கடலையை வாங்கி அவற்றை வாங்கி வறுத்து கோயில்களில் விற்கிறார்கள். சந்நிதி கோயில் திருவிழாக் காலங்களில் தான் ஆகக்கூடுதலான கடலை வியாபாரம் நடைபெற்றது. மட்டூர் கடலை 30 மூடை, சிந்தாமணிக் கடலை 25 மூடை, சோளம் 15 மூடை , கொண்டைக்கடலை 10 மூடை, கச்சான்கடலை 25 மூடை. இவை சந்நிதி திருவிழாக் காலத்தில் மட்டும் நான் விற்பனை செய்த கடலை வகைகள் ஆகும். என்னிடம் வாங்கியது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி கிழக்கில் மட்டும் வேறு 5 இற்கு மேற்பட்ட மொத்த வியாபாரிகளிடமும் பெண் கடலை வியாபாரிகள் கொள்வனவு செய்வதுண்டு. பெண் கடலை வியாபாரிகள் பல சாதிகளைச் சேர்ந்தவர்கள். அநேகமாக எல்லோரும் 35வயதிற்கு மேற்பட்டவர்களாயிருந்தனர். ஒவ்வொரு பெண் வியாபாரியும் 2000 ரூபாவிற்குக் குறையாத கடலை கொள்வனவு செய்வதுண்டு. மாண்டுவண்டி, பஸ், வான் போன்ற வாகனங்களில் கடலையைக் கொண்டு செல்வார்கள். கடலைகளை ஓலைப்பெட்டிகளில் வைத்து விற்பார்கள். ஒவ்வொரு பெட்டியும் ஏறத்தாழ 10 கொத்து அளவான கடலையைக் கொள்ளக்கூடியதாக இருக்கும். ஏறத்தாழ 9" – 6" விட்டங்கள் கொண்ட வட்டவடிவான அடுக்குப் பெட்டிகளை காசு வைக்கப் பாவித்தனர். சில்லறைக் காசுகளை ஒவ்வொன்றிலே போட்டு வைப்பர்.

மேற்காட்டிய தகவல்கள் ஆற்றங்கரையானின் சந்நிதியில் பெண் வியாபாரிகள் தொகை அதிகமாக இருந்ததைக் காட்டுகின்றன. குடும்பச் செலவுகளைச் சமாளிக்க முருகன் வாசலிலே இருந்து தொழில் புரிந்த அந்தப் பெண்களும் அவனது அன்பர்களே. கோயிற் பிரசாதத்துடன் கடலை கச்சான் வாங்கிப் போவதும் யாழ்ப்பாணத்திலே நடைமுறையாக உள்ளது. இந்த வழக்கம் எப்படி ஏற்பட்டது என்பது தெரியவில்லை. எனினும் பயற்றம்பருப்பை உகக்கும் முருகனின் அன்பர்கள் கச்சான் கடலையையும் முற்காலங்களில் நிவேதித்தும் இருக்கலாம். இன்னும் சுண்டற்கடலை இப்போதும் கோவில்களில் நிவேதனப் பொருளாக இருந்து வருகிறது.

ஆற்றங்கரையானின் அன்பினால் கட்டுண்டவர்கள் பலர் தமது குடும்பங்களைத் துறந்து அங்கு வந்து தங்கிவிடுவதும் உண்டு. அங்குள்ள மடங்களிலே கட்டுப்பாடு இல்லாமையால் எவரும் எப்போதும் வந்து தங்கிச் செல்லலாம். அவர்கள் காலக்கிரமத்தில் பற்றற்று துறவிகளாகி முருகனின் அன்பர்களாகிவிடுகின்றனர். வேறு கோயில்களில் இவ்வாறு நிரந்தரமாகத் தங்குவதற்கு வசதிகள் குறைவு.

இன்னும் முருகனின் அன்பால் கட்டுண்டு அவனுக்கான பணி செய்வோர் பலர். ஆற்றங்கரையானின் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டபோது தேரோடும் பாதை முழுதுமே முருகனடியார் பணியால் செய்யப்பட்டது. 15இற்கு மேற்பட்ட ஊர் மக்கள் தினமும் இப்பணியைச் செய்தனர். பல இளைஞர்கள் ஆர்வத்துடன் தமது உடல் உழைப்பை நல்கினர். இந்தச் சிரமதானப் பணியினாலே சுமார் ஒரு இலட்சம் ரூபா மீதப்படுத்தப்பட்டது. அன்பர்கள் யாவரும் தமது சொந்தப் பணிபோல முருகன் பணியைச் செய்தனர். சிரமதானம் என்ற தானத்தையும் முருகனுக்குக் கொடுத்தனர். அவனும் அவர்களுக்கு என்றும் அன்னதானமளித்து வருகின்றான். முருகனின் முன்னின்று கும்பிட்டுப் பொருள் பெறுவதை விட, அவன் வீதி வலம் வருகின்ற வீதியைச் செப்பனிட்டு தம் வாழ்வையும் வளம்பெற வைத்த அன்பர்கள் பலர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புநிலையாலே கோயிலின் அருள்நிலை கூடும். தெய்வங் கொண்டாடும் இடத்திலேதான் குடியிருக்கும். "கோயிலில்லா ஊரிலே குடியிருக்கவேண்டாம்" என்று நம்முன்னோர் கூறிப்போந்தனர். கோயில் அன்பு நிலையால் அனைவரையும் ஈர்க்கும் ஓர் ஒப்பற்ற இடம். மனத்தூய்மை உடையவரே முருகனை முற்றாக உணரமுடியும். மற்றவர். மணிவாசகர் போல் "நாடகத்தாலுன்னடியார் போல்" நடித்து வாழ்பவர்கள். முழுமையான அன்பு நிலையை உணர்ந்தவர் காரைக்காலம்மையார். அவர் உருவத்தினைக் காணாமலே இறைவனில் ஈடுபாடு கொண்டவர். வழிபடுவோரது சிறப்பினாலேயே கோயில்கள் சிறப்புப் பெறுகின்றன. செல்வநிலை காட்டுகின்றன. இதைப் பரிபாடலடிகளும் விளக்குகின்றன.

**"உடம்புணர் காதலரு மல்லாருங் கூடிக்**
**கடம்பமர் செல்வன் கடிநகர் பேண**
**மறுமிடற் றண்ணற்கு மாசிலேடந்த**
**நெறிநீர் அருவி யசும்புறு செல்வ**
**மண்பரிய வானம் வறப்பினும் மன்னுகமா"**

மாறாத அன்பு கொண்ட அனைவரும் ஒருங்கே குழுமி செவ்வேள் காவலையுடைய கோயிலை வழிபட, மழையற்றுப் போயினும் செல்வம் நிலைப்பதாக என்று கூறும் வாழ்த்து, அன்பர்களின் அன்பு மழையே எல்லாவற்றிலும் பெரிய செல்வம் என்று உணர்த்துகின்றது. அந்த அன்புதான் உலகத்தை இடுக்கண்ணிலிருந்து விடுவிக்கும் சக்தியுடையது. எல்லோரும் ஓர் நிலைக்கு ஏற்றத்தாழ்வற்று ஆற்றங்கரையானின் அன்பிலே ஈடுபட்டிருக்குமிடம் என்ற பெருநிலையால் செழிப்புற்றே அக்கோயில் "செல்வச்சந்நிதி" என்று அடை பெற்று அழைக்கப்பட்டது போலும். அழியும் பொருட் செல்வமன்றி அழியாத அன்புச்செல்வம் நாடி சந்நிதி வந்து அடைக்கலமானவர் ஆற்றங்கரையானின் அருகு உணர்ந்தனர். வேலின் துணையே துணையாகவும் துறந்து பயமற்று வாழ்வர். மக்கள் வாழும் இடங்களிலே மண் வளம் மிக்கது ஆற்றங்கரை. அதிலும் ஆறு கடலுடன் சங்கமமாகும் கழிமுகமும் மிகவும் செழிப்பானதென்பர். கழிமுகத்தமர்ந்த வேலனை, சூரன் உடல் கிழித்து வானவர் துயர் தீர்த்த வெய்யோனை, விண்ணவர் சிறை மீட்டானை, அன்பர் நெஞ்சில் வந்தமர்ந்தானை, சந்நிதி கொண்டானை, வழிபட்டால் வாழ்த்தின் செல்வம் பெருகும், துயர் அருகும். அவனருளால் அவன்தாள் வணங்கினோர் பலர், அவன் வழிச்சென்றோர் பலர். எல்லோரும் சென்ற வழியே நாமும் சென்று ஆற்றங்கரையானைக் கூடுவோமாக. செல்வச்சந்நிதியை நாடுவோமாக.

**ஆற்றங்கரையானை அடையும் நாளும் எதுவோ!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயத்தின் புதிய செல்நெறி

திரு.ஃ சி. ஜெயகுகன் அவர்கள்

தற்காலத்தில் மனிதர்களுடைய மனம் புதிய உலக ஒழுங்கு, புதிய கல்வி, சுதந்திரம் போன்ற இன்னோரன்ன அம்சங்களைப் பற்றியே அதிகம் எண்ணுகின்றது. அந்த வகையில் நாங்கள் மனித இனத்தின் மிகவும் பழமை வாய்ந்த நிறுவனம் ஒன்றின் புதிய செல்நெறி பற்றிக் கலந்துரையாடுவது தொடர்பில் கவலைகொள்வதற்கு காரணம் எதுவும் இல்லை. மனிதனின் மிக ஆரம்பகால வாழ்க்கையிலேயே சமயம் கலந்துவிட்டது. மனித இனத்தின் பாரம்பரியங்கள் ஒன்றுடனொன்று கலந்த போதே 'கடவுள் மண்ணிலிருந்து மனிதனை உருவாக்கி மூச்சுக்காற்றை வழங்கினார்' என்ற கூற்றுடன் சமயம் உருப்பெற்றது. மனிதனின் வாழ்வில் அவனுடைய சிருஷ்டி கர்த்தாவான கடவுளை நேருக்கு நேர் கண்டதில்லை. எனவே கடவுளை மனிதனுடன் தொடர்புபடுத்த சமயவாழ்வென்பது உருப்பெற்றது. இதுவே சமயத்தின் தோற்றுவாயாக அமைந்ததெனலாம். எனினும் பின்பே சமயம் என்பது பெணகளுடனும் மனநிலையுடனும் குறைந்தளவு தொடர்பைப் பெற்றுக்கொண்டது.

நவீன விஞ்ஞான நோக்கில் பார்க்கும்போது மனித இனத்தின் (ஹோமோசேப்பியன்ஸ் - Momosapiens) எழுச்சியுடன் மிருகத் தளையிலிருந்து விடுபட்டு சுவர்க்கத்தையும் இவ்வுலகினையும் படைத்தவனைப் பற்றி புலன்களால் உணர்ந்தறிதற் பொருட்டு சமயம் என்பது தோற்றம் பெற்றதெனலாம். மனித சமூகவிருத்திக் கற்கை விஞ்ஞானம் (Anthrophlogy) என்பது ஆரம்பகால சமயம் தொடர்பாகவும் அது வன்முறைமீதான வெறியைக் கட்டுப்படுத்தி மனிதர்களை பல்கலாசாரப் பண்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சமூக விலங்காக மாற்றுவதற்கென ஆற்றிய பங்கு தொடர்பாகவும் மிகப் பரந்தளவில் ஆராய்கின்றது. இவ்விடத்தில் இந்து கலாசாரம் பற்றி நோக்குவோமாயின், அது பண்டைய் வரலாற்றுப் பெருமைமிகு நாகரீகம் என்பதனைக் காணலாம். எனவே மனிதன் அவனுள் ஒளிந்திருக்கும் உண்மையை உணரும் பயணத்தில் பல படிகளைக் கடந்துவரவேண்டும்.

சமயங்களின் மீட்பர்கள் வரலாற்றில் தடம் பதித்தவர்கள். மனிதகுலம் எப்போ தெல்லாம் தெளிவின்மையில் சிக்கியிருக்கின்றதோ அப்போதெல்லாம் அவ்வாறான வர்கள் தோன்றுகின்றார்கள். அவரே உலகின் புதிய மையமாகின்றார். மறக்கப்பட்ட விழு மியங்களெல்லாம் மனித குலத்தின் இதயங்களில் புத்தூக்கத்துடன் அளிக்கப்படுகின்றன. அவற்றின் போது புதிய கலாசாரம் உருவாக்கப்படுகின்றது. தனது வாழ்நாளில் மனிதன் அவனது சொந்த வாழ்வினை தகவமைத்துக் கொள்ளவேண்டியுள்ளது. சமயங்களின் தாக்கம் காரணமாக சமூகங்கள் அடிக்கடி பெருமாற்றங்களிற்கு உள்ளாகின்றன. இச் சந்தர்ப்பங்களில் பழைய கலாசாரம் புதிய கலாசாரத்தால் பதிலீடு செய்யப்படுகின்றது. வலிமைமிகு அத்தகைய மாற்றங்கள் அதனை ஏற்படுத்தியவர்களின் பெயர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுகின்றன. ஆனால் ஞானியோ அதனிலும் ஆழமான உணர்வின் மூலம் சமயங்களிற்கு இடையே காணப்படும் தொடர்ச்சியினை அறிவதோடு, வேறுபட்ட போதும் அவற்றின் உட்கிடை ஒன்றே என்றும் அறிவான்.

மனிதனின் ஆன்மீக வாழ்வு புதிய இறைதூதர்களால் வேகம் பெறுகின்றபோது முழு மனித வாழ்வுமே அர்த்தம் பெறுகின்றது. இவ்வேளையில் புதிய ஆற்றல் உருவாகப்பெற்று செயற்படுத்தப்படும் அதேவேளையில் புதிய பிரச்சினைகளும் உருவாகின்றன. மேலும் தத்துவங்களுக்கு புதிய விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன அல்லது புதிய இறைதூதர் ஒருவரின் வரவிற்கான காத்திருப்புத் தொடர்கின்றது. மனித வரலாற்றுப் பதிவுகளெங்கும் சமயங்களின் தோற்றம், வாழ்வு, மறைவு என்பன பதிவு செய்யப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் சமயங்கள் முற்றாக அழிவடையாது போனாலும் அவை மனித சமுதாயத்தின் செல்வாக்கிழந்த எகிப்திய, பபிலோனிய, கிரேக்க சமயங்களைக் குறிப்பிட முடியும். மேலும் சில பிந்திய சமயங்கள் தமது நெகிழாத் தன்மையினால் மானிட சமூகத்தின் மாற்றங்களுக்கு ஈடுகொடாமல் வழக்கொழிந்து போயின. ஆனால் இந்து சமயம் போன்ற சில சமயங்களே புனிதர்களின் வாழ்வினால் புதுவேகம் பெற்று அழிவெய்தாது பலம் பெற்றுத் திகழ்கின்றன.

பூரணமான சமயம் என்பது நடைமுறை வாழ்வின் சிக்கல்களைப் பகுத்தாய்வு செய்து தீர்க்கவல்லதாய் அமைதல் வேண்டும். ஒழுக்க விழுமியம் பற்றிய குழப்பங்கள், பொருளாதார சமத்துவமின்மை, அரசியல் பொருத்தப்பாடின்மைகள் என்பவற்றை எங்கும் காணலாம். இதனைப்பற்றி சாதாரணமாக தெருவில் செல்லும் மனிதன் இவற்றிற்கான காரணம் எங்கோயிருப்பதாய் எண்ணுவான். அவன் அவற்றிலிருந்து விடுபடும் பொருட்டு ஏதோ சிறிய தத்துவார்த்த விளக்கத்தை ஏற்படுத்துகின்றான். இது அவனைத் துயரிலிருந்து விடுவித்து சிறிது ஆறுதலையளிக்கின்றது. சிந்தித்தல் என்பது மிகவும் கடினமான ஒன்று. ஆனால் அதனினும் கடினமானது நீண்டகாலத்திற்கு சந்தேகம், வெறுப்பு என்பவற்றை மனதில் நிறுத்தி வைத்திருத்தலாகும். சாதாரணமான ஒரு மனிதன் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் போது அதிலிருந்து விடுபடுவதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைக்கின்றான். அதனாலேயே அரசியற் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஒருவன் வாழ்வைப் பற்றிய நன்மையைப் பார்க்கும் அதேவேளை வாழ்வில் அடிமை எண்ணம் கொண்டவனோ விதியை நோக்குகின்றான்.

வறுமையும் துயரமும் எம்மை வாழ்வின் இருண்ட பக்கத்திற்கு அழைத்துச் செல்கின்றன. எல்லா இடங்களிலும் மனிதகுலம் வீழ்ச்சியை நோக்கிச் செல்கின்றது என்ற சொற்களைக் கேட்கின்றோம். இவ்வுலகு எங்கும் தடைகளும் திருப்தியின்மையும் வியாபித்திருப்பதைக் காண்கின்றோம். பழமையான ஒழுக்கங்களின் தடைகள், அதிகாரத்தின் மீதான பணிவு, மிகக் குறைந்த திருப்தி, ஆளும் பணக்கார வர்க்கத்தின் காட்டுமிராண்டித் தனத்தை எதிர்கொள்வதற்கு ஏழைகள் காட்டிய அளவற்ற பொறுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றன நல்ல சமயநெறியின் சாரத்தை இப் பூவுலகில் இருந்து மறைந்து போகச் செய்துவிட்டன. இவ்வாறான நிகழ்வுகளைக் கண்ணுற்ற ஒரு பகுதியினர், சமயம் தன் பணியை நிறைவு செய்யத் தவறவிட்டது என்றனர். மற்றைய பகுதியினரோ இந்தத் துயரங்களையும் சமயத்தினையும் சேர்த்தே அகற்றிவிட வேண்டுமென்றனர். இதில் இரண்டாவது பகுதியினரே சமதர்மவாதிகள் அல்லது பொதுவுடமை வாதிகள் எனப்பட்டனர். மூன்றாவது பகுதியினர் எதையுமே விஞ்ஞானத்தின் மூலமே பார்ப்பவர்கள் (நவீன விஞ்ஞானம் அல்ல. அது 17ஆம் நூற்றாண்டின் பழைய விஞ்ஞானம்) இவர்கள் கடவுளே இல்லை என வாதிடுபவர்கள். இவ்வாறான வாதங்கள் மனித இனத்தை ஆட்டிப்படைக்கின்றன. எதையும் நம்பாமல் சந்தேகிப்பது என்பது கல்வி கற்றோரின் ஒரு பண்பாகிவிட்டது. இவ்வாறான குழப்பகரமான நிலை என்பது புனிதத் தன்மையின் மீதான எதிர்பார்ப்பை முற்றாக இல்லாமற் செய்துவிட்டது.

புத்துருவாக்க கலைகளும், பெண் மதவேசிகளும் மிகவும் துன்பநிலைக்கு உட்பட்டனர். ஐரோப்பாவின் தற்கால கவிதைகள், சித்திரங்கள், சிற்பங்கள் போன்றன நல்ல கலையுணர்வை தட்டியெழுப்புதற்குத் தவறிவிட்டன. சமயத்தின் மிக முக்கியமானதும் அடிப்படையானதுமான தர்ம கைங்கரியம் அருகி வருவதைக் காணலாம். பொய்ப் பரப்புரைகளால் உண்மை மழுங்கடிக்கப்படுகின்றது. நீதி குறுகிய தேசிய வகுப்புவாத நலன்களுக்காக தொடர்ச்சியாக நசுக்கப்படுகின்றது. மனிதன் நீதிக் கோட்பாடுகளிற்காக வேலை செய்யும் தனது விசுவாசத்தை தொலைத்துவிட்டான். மன ரீதியான பிரச்சினைகள், நரம்புத் தளர்ச்சி போன்றவை அதிகரித்துச் செல்வதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இவை யாவும் வீழ்ச்சியின் குறிகாட்டிகளாகும். இவற்றிற்கு இடையிலும் ஒளிக்கீற்றொன்று தென்படுகின்றது. மனித வாழ்வின் ஒற்றுமைக்கெனப் பல சக்திகள் தொழிற்படுகின்றன. ஒரு புதிய நாகரீகம் எழுச்சி பெறுகின்றது. வேறுபட்ட நம்பிக்கையுடையவர்கள் ஒரு பொது நோக்கை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவதற்கான செயற்றளத்தை நிறுவும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மனிதர்கள் தமது சகோதர மதத்துடன் இணங்கி வாழ்வதற்கு கற்கின்றனர். விசுவாசத்திற்கான சகோதரத்துவ அமைப்புப் போன்றவை புதிய மத ஒழுங்கினை பரிசோதித்துப் பார்ப்பதற்கு முயற்சிக்கின்றன. இம் முயற்சி நல்ல வேகம் பெறவேண்டும் என்பதே எமது வேணவா ஆகும்.

மேற்கு, கிழக்கின் சமயத்தினைப் புரிந்துகொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது. கலாசாரப் பண்புகொண்ட மனங்கள் உண்மைப் பொருளினை அறிய முயல்கின்றன. குறைந்த கல்வியும் மேம்போக்காக நடத்தையும் கொண்டவர்கள் போலியான ஒன்றிலேயே திருப்தியுற்றவராகிவிடுவர். இதிலே பெரும்பாலும் மந்திரம், பரிசுத்தம், மலிவான யோகக்கலை போன்றவற்றிற்கான கவர்ச்சியான விளக்கங்களிலேயே மேற்கத்தையவர்கள் கவரப்பட்டுள்ளனர். இவை யாவும் உண்மையான ஆன்மீக அனுபவ முன்னேற்றத்தை மறைமுகமாகத் தடை செய்யும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் கிழக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே அவற்றைக் கைவிட்டுவிட்டது.

சமயத்தின் ஒழுக்கவழி என்பது நீண்ட ஆத்ம தாகத்தின் அடிப்படையில் அமைந்ததும் அதன் ஒவ்வொரு நிலையிலும் உண்மையின் ஒளியினால் வழிகாட்டப்படுவதும் ஆகும். இதில் பொறுமையற்ற குறுக்குவழி என்பது இருள் நிறைந்த குழப்பகரமான ஒன்றிற்கே வித்திடும். தமது முன்னோரின் சமயத்தைப் பின்பற்றும் ஒருவனுக்கு கிடைக்கும் அனுகூலம் என்னவெனில் முன்னோர்கள் மிகவும் சிரமப்பட்டு அறிந்த விடயங்கள் பலவற்றை அவனையறியாமலே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதாகும். ஒரு புதிய சமயத்தைப் பின்பற்றுவது என்பது ஓர் புதிய மொழியினைப் பயில்வதைப் போன்றதாகும். தாய்மொழியின் இலக்கண விதிகள் எம்மை அறியாமலே கற்கப்படும் அதேவேளை, பிறமொழிகளின் இலக்கண விதிகளைக் கற்றுப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. இதன் காரணமாகத்தான் பிற சமயத்தவர்கள் இந்து சமயத்தைக் கற்கும்போது அதன் தத்துவங்களை மிகவும் கவனமாகக் கற்கின்றனர். 'தத்துவமற்ற சமயம் என்பது சாரமற்றது அல்லது ஈரமற்றது' (சுவாமி விவேகானந்தர்). இங்கே தத்துவம் என்து பரந்த அடிப்படையில் பொருள் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகவுள்ளது. ஒருவருடைய கல்வித் திறனைப் பொறுத்து சமய நூல்களைக் கற்பதனூடாக தெளிந்த சமய அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும். சிறுவர்களை மதம் மாற்றுவதும், உண்மையிலிருந்து விலகிய பெரியோரின் அலட்சியமும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை ஆகும். இதனால் அவர்களால் உண்மையகைக் கண்டறிந்து ஒரு முடிவிற்கு வரமுடியாது. சமயம் என்பது வாழும் வழியாகும். அது பெரும்பான்மையோரை அவ்வழியில் நிலைக்கச் செய்கின்றது.

பௌதீக இரசாயனத்தின் பழைய சிந்தனைக் கோட்பாடுகள் எல்லாம் புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் மாற்றம் பெற்றுள்ளன. பௌதீக விஞ்ஞான்ம் என்பது கருத்தியலுடன் இணைந்ததொன்றாகவே தற்போது தோற்றம் பெற்றுள்ளது. இவ் இணைப்பானது இருதரப்பிற்கும் சிறந்ததொன்றாக அமையும் எனத் துணிந்து கூறலாம். வெற்று ஊகங்களாகக் காணப்பட்ட தத்துவங்கள் இன்று அவதான அடிப்படையிலான மிகவும் திடமான முடிவுகளை எட்டக்கூடிய நிலைக்கு வந்தடைந்துள்ளன. மேலும் வெளித்தோற்ற புலக்காட்சியை அடிப்படையாகக் கொண்ட குறைபாடுடைய உண்மைகளைக் கடந்து விஞ்ஞானம் எழுச்சி பெற்றுள்ளது. விஞ்ஞானம் மற்றும் தத்துவம் என்பன தொடர்பில் விசாலித்த பார்வையை ஏற்படுத்திக் கொள்வதற்கான தருணம் இதுவாகும். விஞ்ஞானத்தினால் மிகச் சரியாக வேண்டப்படும் ஒழுக்கம் என்பது சமயங்களினால் கேட்கப்படும் ஒழுக்கங்களிற்கு சமயமாகவே உள்ளது.

விஞ்ஞானம் பன்மைத் தன்மைக்கு மத்தியில் ஒருமைப்பாட்டைக் காண்பதற்கு விளைகின்றது. எல்லா பௌதீக விடயங்களும் தொண்ணூற்று இரண்டு அடிப்படையான அம்சங்களாகக் குறுக்கப்பட்டுள்ளன. இவை பல்வேறு சக்திகளின் பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு காட்டப்படுகின்றன. உண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் பௌதீக அம்சத்தினை பொருள் முதற் கோட்பாட்டிலிருந்து விலக்கியுள்ளது. இப் பிரபஞ்சத்தை விளக்கும் கணித விஞ்ஞானக் கோட்பாடுகளின் அடிப்படையானது உண்மையான எண்ணங்களை மையப்படுத்தி அமைந்திருப் பதனைக் காணலாம். தூயவிஞ்ஞானிகளின் சுயமான விஞ்ஞானக் கருத்துக்கள் சமயங்களின் ஆரம்பக் கருத்துக்களுடன் பயணிப்பதை உணரலாம். கடவுள் மிகச் சிறந்த கணித நிபுணராகக் கணிக்கப்படுகின்றார்.

மிகவும் உயர்தரம் வாய்ந்த கவியும் கலைஞருமான டயற் என்பவர் கூட முடிவற்ற சக்தியின்பால் நம்பிக்கை கொண்டிருந்தார். உண்மையின் ஊற்றை அடைவதற்கும், அழகு, நன்மை என்பவற்றை அடைவதற்கும் பல வழிகள் உள்ளன. பரந்துபட்டுக் காணப்படும் இந்தப் புரிதல் என்பது சமயங்களின் நவீன போக்குத் தொடர்பான மனித நடத்தையின் புதிய வெளிப்பாடு ஆகும். இத் தெளிவின் அடிப்படையில் கல்வி என்பது சமயக் கல்வியாகவே அமைந்துள்ளது. சமயத்திற்கும் சமய சார்பின்மைக்குமிடையிலான கல்வி ரீதியான தடைகள் என்பவை கடந்தகால வரலாறு என்பது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. நேர்மறையான விஞ்ஞானத்தின் தாக்கம் கற்ற மனிதர்களை விஞ்ஞானம் சார்ந்த சமயம் நோக்கித் திருப்பியுள்ளது. அந்தச் சமயம் மனிதனிற்கு தர்க்கரீதியான காரண காரியங்களை விளக்குவதாக அமையவேண்டும். பிரார்த்தனை என்பது இலகுவில் விளங்கிக் கொள்ளப்படக்கூடிய அளவிற்கு அறிவார்ந்ததாகவும் உண்மையை நோக்கியதாகவும் அமைதல் வேண்டும். எனவே சமயம் என்பது பல பக்கங்களைக் கொண்டது. மனிதனிற்கு உதவாத சமயம் என்பது வெறும் ஏட்டுச் சுரக்காயாகவே அமையும். சமயம் என்பது மனித இனம் துன்பத்திலிருக்கும்போதோ அல்லது சுதந்திரமாய் உள்ளபோதோ அல்லது கீழ்நிலையில் உள்ளபோதோ அல்லது தூய்மையற்ற நிலையில் உள்ளபோதோ எப்போதும் உதவுவதாக இருக்கவேண்டும். எங்கும் சமத்துவத்தை வருவிப்பதாக அமைதல் வேண்டும் (சுவாமி விவேகானந்தர்). இந்து சமயம் என்பது மிகவும் பரந்தது. அதனுடைய புனிதத்தன்மை, புராணக் கதைகள், தத்துவங்கள் என்பன சமூகத்தின் பல்வேறு தரப்பினரதுதம் தேவைகளைப் பூர்த்தி செய்வதாய் உள்ளதுடன் மனிதனுக்கு தேவைப்படும் போதெல்லாம் உதவும் ஆற்றலையும் கொண்டுள்ளன.

புராதன இந்தியச் சிந்தனையாளர்களிடமிருந்த தத்துவம் என்பது புலமைசார் ஒன்றாக அமைந்திருக்கவில்லை. இயற்கையின் மாற்றம், மனித வாழ்வின் மாற்றம் என்பனவற்றிற்கான தேடல் சாதாரண பிறப்பு, இறப்பு போன்ற விடயங்களுக்கு மேலாகவே அமைந்திருந்தது. அவர்கள் உணர்வுகளின் பல்வகைத் தன்மையை விளக்குவதுடன் மாத்திரம் திருப்தியடையவில்லை. அதற்கு மேலதிகமாக உண்மை, அழகு, நன்மை என்பனவற்றின் ஆழமான மூலங்களைக் கண்டறிவதில் முனைப்புக் காட்டினர். அதனையே ஏனையோர் உபநிடத காலத்தவரின் விசேட ஆன்மீக அனுபவம் எனவும், தத்துவ ஊகத்தின் பதப்படுத்தப்படாத நிலை எனவும் தெரிவித்தனர். அவர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையைக் கண்டறியும் பூரண ஞானத்தை அடைவதற்கான கருவியின் அவசியத்தை உணர்ந்து கொண்டனர்.

தத்துவ விசாரணையின் கருவியாகக் காணப்படும் மனமானது பக்கச்சார்பு, தவறான அபிப்பிராயம் என்பன இன்றி தூய்மையானதாக விளங்க வேண்டும். இதற்காக தத்துவ விசாரணையில் ஈடுபடும் ஆய்வாளர் சமூகப்போட்டி மற்றும் ஒழுக்கயீனம் என்பவற்றில் இருந்து விலகியிருக்க வேண்டும். மொஹஞ்சதாரோ நாகரீக காலத்தில் யோகவிஞ்ஞானமானது பூரண ஒழுக்கத்தினுடைய தேவையை நீண்ட காலத்திற்கு முன்பே வலியுறுத்தியுள்ளது. மொழி, தத்துவம் என்பன கூட பூரணமாக இருக்கவேண்டியது அவசியமாகும். இதனால் உபநிடதத்தின் பல பிரிவு தத்துவ சிந்தனைகள் விவரிக்கப்படமுடியும். மிக உயர்ந்த உண்மையின் புரிதல் என்பது இலக்குடன் கூடியதாக அமைந்திருக்கும். அதேவேளை மற்றைய உபதேசங்கள் அல்லது ஒழுக்கங்கள் வழிகளாகக் கொள்ளப்படுகின்றன. ஆன்மீக ஞானத்தைப் பெற்ற ஒருவன் அதன் பின்னர் சமூகக் கடமைகளில் தன்னை வெகுவாக ஈடுபடுத்திக் கொள்ளமுடியும். இது பிளேட்டோவின் கல்வித் தத்துவத்தை ஒத்ததாக அமைந்துள்ளது.

தற்போது காணப்படும் நிலையில் மிகப் பெரும்பாலோனோர் பிளேட்டோ வினதோ அல்லது பண்டைய இந்தியச் சிந்தனையாளர்களதோ முறை முறைமைகளைப் பின்பற்றுவது சாத்தியமற்றதாக உள்ளது. புதிய வாழ்வியல் நடத்தைக் கோலம் என்பது செயலூக்கமுள்ள நடைமுறை வாழ்விற்கு சௌபாக்கியத்தை வழங்குவதைப் போல் உள்ளது. தற்கால மனிதர்கள் தமது நாளாந்தக் கடமைகளை ஆற்றுகின்ற அதேவேளை மிகவுயர்ந்த உண்மையை அறிவதற்கான வழியையும் கண்டறிய வேண்டியுள்ளனர். இது சாத்தியமற்ற ஒன்றல்ல. வேத காலத்தின் தருமவியாதன் மற்றும் இல்லத்தரசி ஆகியோரது கதை சாதாரண வாழ்க்கை வாழ்வோரும் அவ்வாழ்வில் இருந்து கொண்டே மிகவுயர்ந்த உண்மையை அறியமுடியும் என்பதை உணர்த்துவதாய் உள்ளது. அக்கதையைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

ஓர் இளம் துறவி ஒருவர் காட்டில் பல வருடங்களாக யோகப்பயிற்சி செய்து வந்தார். ஒரு நாள் அவர் மரமொன்றின் கீழ் ஆழ்ந்த தவத்தில் இருந்தார். அப்போது சில இலைகள் அவரது தலையின் மேல் விழுந்தன. அங்கே ஒரு கொக்கும் காகமும் சண்டையிடுவதைப் பார்த்தார். அந்த இளம் யோகியின் தவ ஆற்றலால் அவரது கோபப்பார்வை அவற்றின் மேல் விழுந்ததும் அப்பறவைகள் இரண்டும் சாம்பராயின. அதனால் திருப்தியுற்ற அந்த யோகி உணவு பெறுவதற்காக முதலில் ஒரு வீட்டிற்குச் சென்றார். வீட்டினுள்ளேயிருந்து யாரோ சற்றுநேரம் பொறுத்திருக்குமாறு கூறியது கேட்டது. அந்த இளம் யோகிக்கு இதனால் எரிச்சல் உண்டாகியது. தன்னைப் போன்ற சக்திவாய்ந்த ஒருவரைக் காக்கவைப்பதற்கு என்ன தைரியம் வேண்டும் என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டார். அப்போது உள்ளேயிருந்து ஒரு குரல், 'தம்பி உன்னைப்பற்றி அவ்வளவு உயர்வாக எண்ணாதே. இங்கேயிருப்பது கொக்கோ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகமோ அல்ல' என்பது. அந்த இளம் ஞானி ஒரு கணம் திகைத்துப் போனார். சிறிது நேரத்தின் பின் அந்த வீட்டுப் பெண்மணி வெளியே வந்து அந்த யோகியின் பாதத்தில் விழுந்து வணங்கி தானம் கொடுத்தாள். 'தாயே, உங்களுக்கு காட்டில் நடந்தது எவ்வாறு தெரியும்?' எனக் கேட்டார். அதற்கு அந்தப் பெண் 'நானோ எழுத்தறிவு அதிகம் இல்லாத ஒரு பாமரப்பெண். என்னுடைய சிறு வயதிலிருந்தே எனது பெற்றோருக்குப் பணிவிடை செய்தேன். அதன் பின் எனது கணவரிற்குப் பணிவிடை செய்கின்றேன். நீங்கள் வந்தபோது நோயாளியாய் உள்ள எனது கணவரிற்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். எனக்கு உங்கள் மனதில் தோன்றியதையும், காட்டில் என்ன நடந்ததென்பதையும் தெளிவாக அறிய முடிந்தது. இதனை நான் சாதாரணமாக எனது வேலையைச் செய்வதனூடாகவே பெற்றுக்கொண்டேன். இதனிலும் அதிகமாக ஏதேனும் அறிய வேண்டுமென்றால் அருகில் உள்ள நகரத்தில் ஓர் இறைச்சிக் கடைக்காரர் இருக்கின்றார். அவர் ஏதேனும் உயர்ந்த விடயங்களை உபதேசிக்கக்கூடும்' என்றாள். அவளிடமிருந்து விடைபெற்ற அந்த இளம் துறவி அவளது வழிகாட்டுதலிற்கேற்ப இந்த இறைச்சிக் கடைக்காரனைச் சந்தித்தார். பெரிய இறைச்சித் துண்டுகளை வெட்டிக் கொண்டிருந்த அந்த இறைச்சிக் கடைக்காரரை அணுகுவதற்கே அந்த இளம் யோகிக்கு தயக்கமாக இருந்தது. ஆனால் அப்பெண்மணி கூறியதைப் போலவே அந்த இறைச்சிக் கடைக்காரன் ஒரு ஞானியாகவே இருந்தான். அந்த இறைச்சிக் கடைக்காரன் தன் பெற்றோருக்கு கடமை செய்வதன் மூலம் எப்படி மிகவும் உயர்ந்த ஞானத்தை அடைகிறான் என்பதைக் கண்டு கொண்டார். பற்றின்றிப் பணி செய்வதே இல்லறத்தார் உயர் நிலையை அடைவதற்கான வழி என்பதனைக் கண்டார். இந்த மார்க்கத்தையே சுவாமி விவேகானந்தர் கர்மயோகம் என்ற பகுதியில் தெளிவாக்கியுள்ளார்.

எமது மனதில் உதிக்கவேண்டிய மிக உன்னதமான உண்மைகளில் ஒன்று செல்வம் அல்லது வளங்களின் மீதான ஆசையும் இறை சேவையும் ஒருங்கே செய்வது மிகவும் கடினமானது ஆகும். ஆன்மீக ஞானம் பெறவிளையும் ஒருவர் பலம், பெயர், புகழ், சமூக நிலையேற்றம், காமம், பொருளாசை, கோபம், வெறுப்பு, தானம் என்பவற்றில் பற்றற்று இருக்கவேண்டும். எல்லாவற்றிலும் பற்றற்றிருக்கும் அதேவேளை ஒருவன் தனது குடும்பத்தினர்க்கான, நாட்டிற்கான கடமையை, மனித குலச்சேவையை செய்யமுடியும். அதிஷ்ட வசமாக அரசாங்கம் ஒருவனது தனிப்பட்ட நம்பிக்கைகளில், பொருளாதாரப் போட்டியற்ற சமூக விடயங்களில் தலையிடுவ தில்லை. ஒரு சமூகம் தருமவழியில் செலுத்தப்படும்போது தனிப்பட்ட வாழ்வினை சரியான வழியில் செலுத்துவது மிகவும் இலகுவானதாகும். புதிய உலக ஒழுங்கு என்பது மனிதகுலம் வாழ்வின் மிகவுயர் நிலையை அடைய புதிய குறிக்கோளுடன் நிர்வகிப்பதாக அமையவேண்டும். (அக்காலப்பகுதியில்) இந்தியா இன்னும் அரசியற் சுதந்திரம் பெறாதபடியால் வெளி உலகம் இன்னும் அதன் இந்து தர்மத்தை சமூக பொருளாதார தீர்விற்கான மார்க்கமாகக் காணவில்லை. இந்துச் சிந்தனையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்செல்லை மிகவும் பரந்தது. அது வாழ்வின் அனைத்துக் கோணங்களையும் தொடுவதாகும். இந்துக்களைப் பொறுத்தவரை எல்லாவற்றையுமே அதாவது குளிப்பது, உண்பது என்பவை உட்பட மத ரீதியாகச் செய்கின்றனர். இன்னும் உண்மையைச் சொல்வதானால் இந்துக்களின் முன்னோர்கள் யுத்தங்களில் சண்டையிடுவது, வெற்றிபெறுவது, சாம்ராஜ்யங்களை நிர்வகிப்பது, நீதி வழங்குவது, வியாபாரம் செய்வது, ஊழியம் செய்வது, திருமணம் செய்வது, குழந்தை பெற்றுக் கொள்வது போன்றவற்றை மத ரீயாகவே செய்தனர். சமயம் என்பது வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் பரவியுள்ளது. இவ்வுலகிற்கான இந்தியாவின் மிகவுயர்ந்த பங்களிப்பு சமயம், அது வாழ்வின் உண்மைகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைக்கும்.

ஏன் மேற்கின் விஞ்ஞானமும் சமயமும் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன என்ற வினாவிற்கான விடை மிகவும் இலகுவானது. ஏனென்றால் விஞ்ஞானம் வாழ்வின் ஒரு பகுதியையும், சமயம் மற்றப் பகுதியையும் பார்க்கின்றது. இரண்டுமே பகுதியளவான வாழ்வின் மீதான பார்வைகள் மாத்திரமே. உண்மையில் விஞ்ஞானியும், சமயவாதியும் சந்திக்கின்ற இடமே சமரசம் மிக்கதொன்றாக அமையும். ஏழு நிறங்களின் கலவையான சூரிய ஒளி எமது இடமே சமரசம் மிக்கதொன்றாக அமையும். ஏழு நிறங்களின் கலவையான சூரிய ஒளி எமது கண்களை அடைகின்றபோது தனித்தனி நிறங்கள் அவற்றின் தனித்தன்மையை நீக்கி ஒன்றாகக் காட்சி தருகின்றன. நாம் ஏன் நாசிசம், பாசசம் என்பவற்றை வெறுக்கின்றோம். ஏனெனில் அவை வாழ்வின் பகுதிகளையே பார்க்கின்றன. அவை வாழ்வினின்று வேறாயுள்ளன. ஒருவனை அவனது சொந்தப்பகுதியில் முன்னேற அனுமதிப்பது இல்லை. சமய சகிப்பின்மை என்பது கூட இதே காரணத்திற்காகத்தான் சகித்துக் கொள்ளப்படுவதில்லை. தற்கால மனிதன் மனித சமூகத்தின் மீது பூரணமான வளமான செல்வாக்குச் செலுத்தும் சமயம் ஒன்றையே வேண்டி நிற்கின்றான். அது உயர்ந்த ஞானம்மிக்கதாக விளங்க வேண்டும். அது சாதகமான விஞ்ஞானப் பண்புகளுடன் முரண்படாதவிடத்து, சாதாரண காரணகாரிய விளக்கங்களிலிருந்து மிகவுயர்வான காரண காரிய விளக்கங்களிற்கு இட்டுச் செல்வதாக அமையவேண்டும். அது தனிப்பட்டவர்களின் குழப்பகரமான சமூகப் பிரச்சினைகளுக்கு மிகவுயர் மனவொழுங்கை அல்லது ஒழுக்கத்தைக் கொண்டமைந்த தீர்வுகளை வழங்குவதாக அமையவேண்டும். அத்தீர்வு மனித சமூகத்தில் ஓர் உன்னத இடத்தை வைத்திருப்பதாக அமையவேண்டும். அமைதியும் சமாதானமும் இங்கே ஆரம்பித்து முடிவற்ற ஒன்றினூடாகவே தொடரமுடியும். சுருக்கமாகக் கூறுவதானால் நவீன கல்விகற்ற மனிதனின் சமயம் பற்றிய எண்ணமாக இதுவே உள்ளது. இவ்வாறான எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்து வழங்கும் ஒன்றாக வேதகாலத்து தத்துவ சிந்தனைகள் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போரில் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்ட திருக்கோவில் காங்கேசன்துறை

# இறங்கண்யவளை சிவகுருநாதசுவாமி ஆலய வரலாறு

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்தின் வடபால் சிசுஸ்தானமாகிய திருக்கயிலாய மலையும், மத்தியில் இருதயஸ்தானமாகிய சிதம்பரமும், தெற்கில் பாதஸ்தானமாகிய ஈழுநாடும் உண்டு. ஈழநாட்டிலே தெட்சண கயிலாயமாய திருக்கோணேஸ்வரனால் பூசிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரமும், இராவண சம்காரத்தின் பின், தன்னைத் தொடர்ந்த பிரம்மகத்திதோஷம் நீங்க இராமபிரான் வணங்கிய முன்னேஸ்வரமும், நகுல முனிவராய் தமது கீரிமுகம் மாற வழிபடப்பட்டதும், அர்ச்சுனனால் தீர்த்த யாத்திரையின்போது தரிசிக்கப்பட்டதுமாகிய நகுலேஸ்வரமும் உண்டு. இந்த நகுலேஸ்வரத்துக்கு, கிழக்காக 2 மைல் தூரத்தில், சோழ நாட்டு இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லியினால் தருவிக்கப்பட்ட கந்தசுவாமியின் விக்கிரகம் வந்திறங்கிய காரணத்தால் காங்கேசன்துறை எனப்பெயர் கொண்ட இப் புண்ணிய பூமியில் ஒருபால் அமைந்துள்ள இறங்கண்யவளை எனும் பதியில் இச் சிவகுருநாத ஆலயம் அமைந்துள்ளது.

ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்கு முன்னர் இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் வியாபாரம் காரணமாக இவ்வூர்ப் பண்டங்களை பொதிமாடுகளில் ஏற்றி கண்டியிலிருந்து 17 மைல் தூரத்திலுள்ள பன்னகாமம், தற்போது மாத்தளையென அழைக்கப்படும் ஊருக்குப் போய் பண்டமாற்று செய்து திரும்புவது வழக்கம். இப்படியான பிரயாணம் போய்வர ஏறக்குறைய 6 மாதங்கள் ஆகும். ஒருமுறை இவ் வியாபாரிகள் திரும்பி வரும்பொழுது "முன்னுக்குப் போகும் மாட்டை ஒரு வெள்ளைச் சீலையால் போருங்கள். நீங்கள் 8 நாட்களில் உங்கள் ஊர் போய்ச் சேர்வீர்கள். நான் தான் குருநாதன்" என ஒரு அசரீரி வாக்கு கேட்டது. அப்படியே வணிகர் குழாம் செய்ய வெள்ளைச்சீலையால் போர்த்தப்பட்ட மாடு முன்செல்ல, மற்றப் பொதி மாடுகளும் வணிகர் குழாமும் பின் தொடர வெள்ளைச் சீலையால் போர்த்தப்பட்ட மாடு எட்டு நாட்களில் இவ்வாலயம் தற்பொழுது நிறுவப்பட்டிருக்கும் இடத்தில் உள்ள அரச மரத்தின் கீழ் படுத்துக் கொண்டது. இவ்வூர்த் தலைவருக்குக் கனவில் தோன்றி இட்ட கட்டளைப்படி இவ்வூர் மக்கள் சிவகுருநாத ஆலயம் ஒன்றை அமைத்து வழிபட்டு வருவராயினர். இது கர்ண பரம்பரையாக வரும் கதை. இவ் வாலயத்துக்கருகில் சப்த கன்னியர் குண்டு எனவும் நாச்சிமார் குண்டு எனவும், அழைக்கப்படும். ஏழு நன்னீர் ஊற்றுக்கள் உள்ள திருக்கேணியொன்றும் உண்டு. இப்பெருமான் இங்கு எழுந்தருளியபின், இவ்வாலயத்தை சூழ்ந்த கிராமங்களில் வாழும் மக்களுக்காவுதல், மாடு முதலிய விஷ நோய், பெண்களுக்கு பிரசவ காலங்களில் உண்டாகும் நோய்கள் ஏற்படுவதில்லை. விசேடமாக அரவங்களால் தீண்டப்பெற்று இறந்தவர்களுமில்லை. இவ்வாயலத்தைச் சூழ வடமேற்குப் புறத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசாத்துறைப் பிள்ளையார் கோயிலும், தென்மேற்கு புறத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலும், தெற்குப் புறத்தில் பழை ஞானவயிரவசுவாமி கோயிலும், வடகிழக்கு புறத்தில் நரசிங்க வயிரசுவாமி கோயிலும் அமைந்துள்ளன.

**சிவகுருநாதன் யார்?**

"ஓம் என்னும் பிரணவ மந்திரத்துக்கு பொருள் தெரியாத பிரமனை குட்டி சிறையிலிட்டார் முருகக் கடவுள். பிரமனுடைய சிறையை தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமானே நேரில் முருகக் கடவுளிடம் போய் "ஏன் பிரமனை சிறையிலிட்டாய் எனக் கேட்டார். அப்பா! பிரணவ மந்திரத்துக்கு பொருள் தெரியாதவனை எப்படி சிருட்டி தொழிலைச் செய்ய அனுமதித்தீர்கள் என பதிலிறுத்தார் முருகக்கடவுள். உனக்கு பிரணவ மந்திரத்துக்கு பொருள் தெரியுமா? என சிவபெருமான் கேட்க "ஆம் தெரியும்" என்றார் முருகக்கடவுள். அப்படியானால் எனக்கு இயம்புதி என சிபெருமான் கேட்க, அப்பா நான் குருவாகவும், நீங்கள் சீடனாகவுமிருந்தால் விளக்குவேன் என முருகக்கடவுள் சொல்ல, சிவபெருமானும் உடன்பட்டு பிரணவப் பொருளைக் கேட்டார் என்பது புராண வரலாறு.

அருணகிரிநாதரும் தமது திருப்புகழில்
குருவாகி அரற்கு உபதேசம் செய்த
குகனே குறத்தி – மணவாளா எனவும்
சிவனார் மனங்குளிர உபதேச மந்திர மிரு
செவிமீதினும்பகர் செய் – குருநாதா,
எனவும் அழகுறப் பாடியுள்ளார்.

சிவபெருமான் முருகக் கடவுளின் மேலுள்ள அன்பினால் முருகா நீ சரவணப் பொய்கையில் ஆறு திருவுருவங்களாக விளையாடும் பொழுது, கௌரியால் அணைக்கப்பட்ட ஓர் உருவமாகி கந்தன் எனப் பெயர் கொண்டாய், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனவும் அழைக்கப்பெற்றாய். எனக்கு குருவாக இருந்து ஓம் என்னும் பிரணவ மந்திரத்துக்கு பொருள் விளக்கியபடியால், உனக்கு சிவகுருநாதன் என்னும் பெயரும் வழங்கட்டும், என திருவாய் மலர்ந்தருளினார். எனவே முருகனே சிவகுருநாதன் என்பது வெள்ளிடைமலை.

இப்புண்ணிய தலத்தில் எழுந்தருளியிருக்கும் இப்பெருமானின் வரலாற்றை சைவப் பெருமக்கள் அறியவேண்டுமென்ற பேரவாவினால் இந்தக் கட்டுரையை சமர்ப்பிக்கின்றேன்.

வாழ்க சிவகுருநாதன் அடியார்கள்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அரள்வாய் குகனே.

– இ. குருசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காங்கேசன்துறை

# இறங்கண்யவளை சிவகுருநாதசுவாமி

### மூலவர்



## மேற்படி கோவிலின் சேதமுற்ற தோற்றம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவாக வந்த குமரன்

திரு. சி. பரமகுருநாதன் அவர்கள்

அருவமு முருவுமாகி அநாதியாய்ப் பலவாயொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முருகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

எங்கும் நிறைந்த பரம்பொருளாம் முழுமுதலின் ஒரு கூறே முருகப் பெருமானாவார். பரநாரி பாகன் எடுத்த பல வேடங்களில் ஒன்றே முருகாவதாரம். குழந்தையாய், குமரனாய், குடும்பியாய் வீரனாய் வேங்கை வேடனாய் விருத்தனாய் திருவிளையாடல்கள் பல புரிந்த இக் கலியுக வரதன் குருவடிவாகி வந்த குணவிசேடம் இக் குவலயத்தோர் உள்ளுந்தோறும் உயர்வளிப்பதொன்றாகும்.

சிருஷ்டி கர்த்தாவாம் பிரமதேவர் நான் எனும் அகந்தையுடன் பாலன் முருகனுக்கு போலிவணக்கம் செய்தார். "ஓம்" என்று உரைத்த சொல்லின் பொருள் தெரியாது தேவர்களுக்கு முதல்வரான பிரமா முருகப் பெருமான் முன் மயங்கி நின்றார். பின் முருகனால் கந்தமலையில் சிறை வைக்கப்பட்டார். நான்முகன் சிறையிருக்கும்போது அவர் தொழிலாம் சிருஷ்டித் தொழிலை முருகனே செய்தார். தந்தை சிவன் "ஓம்" என்பதன் பொருள் கேட்டபோது, அவரை சீடனாக்கி தான் குருவாகி வந்து குழந்தை முருகன் உபதேசம் செய்தார் என்று கந்தபுராணம் இயம்புகிறது.

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமா மாறெம்மை வழிப்படுத்துவான் வேண்டி வாழ்க்கையின் குறிக்கோளை கருவாக்கி உருவாக்கப்பட்டனவே புராணக் கதைகள். அருமறைகள், ஆறங்கங்களின் அடிப்படையில் அமைந்த குருநாதசுவாமி கதையில் நாம் பெறும் வாழ்வியல் பயன்களைச் சிந்திப்பது கடனாகும்.

இத்திருவிளையாட்டில் பேரறிஞனான பிரம்மனிடமே பேதமை காணப்படுகின்றது. இது அறிவில் யாம் பெரிதும் வல்லோமே என்று வலிமை கூறவேண்டாமென்கிறது. வேதமோதும் வேதனை விட குழந்தை வேலன் வேதத்தில் மேம்பட்டுக் காண்கின்றான். வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்று இதனால் உணர்தல் வேண்டும். நான்முகனது அறியாமைக்கு ஆணவம் ஆணிவேராகத் திகழ்கின்றது. ஆணவத்தின் பண்பான அகந்தை அகன்றாலே அறிவுடைமை உண்டாகுமென இங்கு தெளிதல் வேண்டும். சிருஷ்டி செய்யும் பிரமனே தவறிழைத்த காலை தண்டிக்கப்பட்டமை, தமர், பிறர், தக்கார், தகவிலார் என்ற பேதமின்றி தவறிழைப்பின் யாருமே தண்டனைக்குரியர் என்பதை தெளிவுறுத்துகின்றது. தன்னினின்றும் தோன்றிய குழந்தையாம் குமரனைக் குருவாக ஏற்று தான் சீடனாகி அறிவை அறியும் ஆர்வத்தோடு அடக்கமாக அமர்கின்றான் அமலன். கற்றல் விரும்புவோர் அறிவுடையோர் எவரானியும் அவரை அணுகி ஆர்வத்தோடும் அடக்கத்தோடும் குருசீட பாவனையில் பயில்தல் வேண்டுமென விளம்புகின்றது இந்நிகழ்ச்சி.

இன்னோரன்ன பல வாழ்வியல் உண்மைகளை உணர்த்திய குருநாதசுவாமி கோயில் கொண்டருளிய ஊரில் குடியிருப்பதும் அவனை நமது குல தெய்வமாக்க் கொண்டிருப்பதும் நமது முன்னை வினையின் முழுமைப் பயனாகும். இத்தகு புண்ணியம் செய்திட்ட நாம் நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்துபாடி தலையாரக் கும்பிட்டு கூத்துமாடி, சற்குருவே, சரவணனே சரணம்! சரணம்!! என்று அவனடியிணையைப் புணையாக்கிப் பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்பப் பெருவாழ்வு பெற்று வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன்துறை இறங்கண்யவளை
# சிவகுருநாதசுவாமி பேரில் பாடிய
# திருவூஞ்சல் பாட்டுக்கள்

## காப்பு

சீருலாவும் மலர்பொலி வாவியுந் திருவுளோங்கு
நன்மாவையில் வந்திடும்
ஏருலாவு குருநாத சுவாமிமேல் இசையும்ஊஞ்சல்
கவியிசை பாடவே
நீருலாவு சடையில் அரவணி நிமல நாயகர்
நின்மலரும் பெற்ற
காருலாவு மதவாரணமுகக் கற்பகப்பிள்ளை
பொற்பதம் காப்பதாமே.

திருமருவு சிவஞான ரூபனால் செல்வனருட்
குருநாத வேதன் தன்மேல்
தருதமிழின் உறைநூலின் பாவினாலே
தயங்கு திருவூஞ்சலிசை பாடியாட
மருமருவு மலைக்கோதை மலைமான் ஈன்ற
மைந்தனென வந்தஒரு கந்தனான்
கருமருவு கயவதனக் குணக்குன்றானை
கற்பகப் பொற்பாதமென்னுங் காப்பதாமே.

உலகுபுகழ் மாமேரு தூணதாக
உயர் அண்ட கோணமெட்டும் விட்டமாக
குலவு திருவாக்கியே கயிறதாக குணநிறை
சந்திரப்பலகை அதன்மேல் வைத்து
இலகுமெழில் கோள்புரிந்த ஊஞ்சல் மீதில்
இன்பமுடன் சேர்ந்தவர்கள் தானும் நின்று
அலகில் அருள்உடனிருந்து ஆடீரூஞ்சல்
அரியகுருநாதரே ஆடீர் ஊஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம்எனும் எழுத்ததனை தூணதாக்கி, அன்பான
விகரமந்தை வளையதாக்கி
உகரம்எனும் வடமதனை உலாவத்தூக்கி
ஓங்காரப்பலகை அதன்மேல் வைத்து
மகரமெனும் துகில்விரித்து வளமதாக, வாழ்வு
பெருஊஞ்சலின் கண் வந்திருந்து
பகருமயில் வாகனரே ஆடீர் ஊஞ்சல்
பரம குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.

சுந்தரஞ்சேர் மாணிக்கத் தூணைநாட்டி
சோதிசெறி மரகதத்தால் விட்டம்பூட்டி
விந்துசெறி முத்துவடம் மீதேதூக்கி
விளங்குவைடூரியத்தால் பலகைவைத்து
தந்தரமாய் துகிலதனை மேல்விரித்து, தயங்கு
திருஊஞ்சலின் மேல்வந்திருந்து
தந்தரமாம் வாகனரே ஆடீர் ஊஞ்சல்
தரும குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.

அறங் கனிக்குந் தொண்டர்கள் கைகூப்பி போற்ற,
அனுதினமும் அவர்களிடந்தனிலிருந்து
புறங்கணியாவரம் கொடுத்து அஞ்சல் என்றும்
பொற்புறு.கண்நோக்கி அருள் எங்குமாக
மறங்கணியாயிருபத் தோராயிரத்து, மற்றும்
உவ்ள சேவகரும் மகிழ்ந்து போற்ற
இறங்கண்யவளைப் பெருமான் ஆடீர் ஊஞ்சல்
ஏந்தல் குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.

காதிலிரு குண்டலமும் மணியுமாடா,
கண்ட சரத்துடன்முத்து மாலையாட
பாதமிடு சிலம்புகலீன்கலீன் என்றாட
பசியமணி கிண்கிணிகள் தொம்தொம் என்றாட
தாதுலவு மலர்மாலை தானுமாட,
தயங்குபுகழ்வாள், பரிசை தானுமாட
மூவுலகு புகழ்ஞானர் ஆடீர் ஊஞ்சல்
முறைமைதிகழ் குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையூர் சிவனுமையும் மனம் செழிக்க
திருமிகு ஐங்கரக் கடவுள் மனம்செழிக்க
சேவையூர்தனில் வாழுந் தேவர், தானும்
சேந்தனருள் கந்தனார் மனம் செழிக்க
மாவையூர் மாசாத்தார் மனம்செழிக்க
மற்றுமுள்ள வயிரவர்கள் மனம்செழிக்க
மாவையூர் நாயகரே ஆடீர் ஊஞ்சல்
வந்தனருள் குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.

பொன்னாடன் முதலாம் புத்தேழிர் போற்ற
புகழ்ஞான முனிவர்கள் விஞ்சயர்கள் போற்ற
சொன்னார் கிம்புருடர்கள், கின்னரர்கள் போற்ற
குலவுசித்த பூதர்கள் கைகூப்பி போற்ற
மின்னாரும் அரம்பையர்கள் நடனமாட
மேதினியில் எல்லோரும் மிகுந்த போற்ற
என்னாகத் துறைதேவே ஆடீர் ஊஞ்சல்
இறங்கண்ய வளைப்பெருமான் ஆடீர் ஊஞ்சல்.


மத்தள தாளங்கள் குமின்குமின் என்றோத
மருவு தாளத் தொனிகள் கிண் கிணுகென்றோத
உத்தமமாஞ் சங்கினங்கள் ஊதியார்ப்ப
ஒலி கொணரம்புகள் செறியாழ் வீணைபாட
சித்தமிகுந் திடநாக சின்னமூத, தேவர்கள்
துந்துமி வாத்தியங்கள் ஆர்ப்ப
வித்தகஞானப் பெருமான் ஆடீர் ஊஞ்சல்
வேத குருநாதரே ஆடீர் ஊஞ்சல்.

சீர்வாழி சதுர்மறையும், முகிலும் வாழி
செயல்பெரிய நால்வருணத் தவரும் வாழி
பார்வாழி சன்னிதியிற் தொண்டு செய்யும்
பரிவுறு பூசாதிமார் தானும் வாழி
ஏர்வாழி, தெல்லிநகர், வாய்மை, வீய்மை
எழில்பழை, காங்கேசன்துறையூர் மயிலை என்னும்
ஊர்வாழி குருதேவர் ஊஞ்சல் மீது
உகந்துமிக நீடூழி வாழியாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை
## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்களின்
# ஒன்பதாவது குருபூசை வைபவம் - 2017









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் தொடர் கட்டுரை – 5

# கோவிலில் வழிபட வாருங்கள்

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள்**

அம்மம்மாவும் அம்பிகையும் கணாதிபனும் வழிபட்டுக் கொண்டிருக்கும்போது வேறும் பலர் கோவிலுக்கு வந்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். இரு சிறுவர்கள் கோவிலை வலம்வர ஆரம்பித்தனர். இருவரும் இணைந்தோ முன்பின்னாகவோ செல்லாமல் ஒருவரை மற்றவர் முந்திச் செல்வதிலேயே குறியாக இருந்தனர். இறைவனை வணங்கவேண்டுமென்ற எண்ணமோ பக்தியோ அவர்களிடம் காணப்படவில்லை. செயலில் விளையாட்டுத் தனமும் பார்வையில் குறும்புத் தனமும் குதித்தாடின. வேகநடைப் போட்டியொன்று அவர்களிடையே இடம்பெற்றது. அதைக் கண்ணுற்ற கணாதிபன் அம்மம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

"கணாதிபனுக்கும் அவர்களுடன் போட்டிபோட ஆசையாயிருக்கிறதா? என்று அம்பிகை கேட்டாள்.

"பக்தியுடன் தேவாரம் பாடிக்கொண்டு மிக மெதுவாக நடந்து வலம்வரவேண்டும் என்று தானே அம்மம்மா சொல்லித் தந்தார். இப்படி ஓடக்கூடாதே".

கணாதிபனின் பதில் அம்மம்மாவிற்கு மகிழ்ச்சியைத் தந்தது.

"எப்படி நடக்கவேண்டும் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்வார்கள். பூரண கர்ப்பிணிப் பெண்ணுக்குக் காலிலே விலங்கு பூட்டி தலையிலே எண்ணெய் நிறைந்த குடத்தை வைத்து நடக்கவிட்டால் அவள் எப்படி நடப்பாளோ அப்படி நடந்து வலம்வரவேண்டும் என்று கூறுவார்கள்.

அம்பிகை இப்படிக் கூறியதும் "ஆறுமுகநாவலர் பெருமான் அருணகிரி புராணத்தில் உள்ள பாடலில் பாடப்பட்டதை எடுத்துக்காட்டி இப்படி எங்களை நெறிப்படுத்தியிருக்கிறார்" என அம்மம்மா அந்த உதாரணம் எங்கிருந்து பெறப்பட்டதென்பதை விளக்கிவிட்டு "அது மட்டுமல்ல, நிலத்திலுள்ள ஜீவராசிகள் கால்களால் மிதிக்கப்பட்டு அழிக்கப்படாமல் நிலத்தைப் பார்த்து கவனமாக அடிவைத்து நடக்கவேண்டுமென்றும் எழுதியிருக்கின்றார்" என்றும் தொடர்ந்து விளக்கமளித்தார்.

"வலம்வரும்போது அந்த வீதியிலுள்ள பலிபீடத்தையும் நந்திதேவரையும் சேர்த்து பிரதக்ஷிணம் செய்யவேண்டும். தற்செயலாக அந்த வீதியிலில்லாவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு வெளியிலுள்ள வீதியிலிருக்கும் பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்து வலம்வர வேண்டும்" அம்பிகை இவ்வாறு மேலுஞ்சில விபரங்களைத் தெரிவித்தாள்.

"பலிபீடத்தையும் நந்தியெம்பெருமானையும் விட்டுவிட்டு எப்படி வலம்வருவது? சிவபெருமானுக்கும் பலிபீடம் இடபதேவருக்குமிடையே போகக்கூடாதல்லவா" என கணாதிபன் கூறினான்.

"எத்தனை தடவை வலம்வரவேண்டும் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்?" என அம்மம்மா கேட்கவும், "மூன்று தரம் அல்லது ஐந்து தரமோ, ஏழு தரமோ ஒன்பது தரமோ பதினைந்து தரமோ, இருபத்தொரு தரமோ சிவபெருமானை வலம்வரவேண்டும். பிள்ளையாரை ஒரு தரமும் சூரியனை இரண்டு தரமும் பார்வதி தேவியை நான்கு தரமும் வலம்வரவேண்டும். விஷ்ணுவையும் நான்கு தடவைகள் தான் வலம்வரவேண்டும்" என அம்பிகை பதிலிறுத்தாள்.

"நாம் வலம்வரத் தொடங்குவோமா?" என அம்மம்மா அம்பிகையையும் கணாதிபனையும் அழைத்துக்கொண்டு வலம்வர ஆரம்பித்தார். தேவாரம் பாடிக்கொண்டு அவர்கள் சுற்றி வந்தனர்.

வலம்வந்த அவர்கள் தாம் கொண்டுவந்த அர்ச்சனைப் பொருட்களை சிவாச்சாரியரிடம் கொடுத்து இறைவனுக்கு நிவேதித்து அர்ச்சனை செய்வித்தார்கள். சிவாச்சாரியார் அர்ச்சனை புரியும்பொழுது பக்தியுடன் சிவதரிசனஞ் செய்து சித்தத்தைச்சிவனடிகளில் வைத்து வணங்கினர். சிவாச்சாரியார் அளித்த திருநீற்றைத் தரித்து அவர் மீளத்தந்த நிவேதனப் பொருட்களை சிவாச்சாரியாரை வணங்கி பணிவுடனும் பக்தியுடனும் பெற்றுக்கொண்டனர்.

அவர்கள் சண்டேஸ்வரர் சந்நிதியை நோக்கியபோது முன்னர் விளையாட்டாக வேகநடையோட்டத்தில் கோவிலை வலம்வந்த இரு சிறுவர்களும் சண்டேஸ்வரரை அதே வேகநடையில் சுற்றிவந்து கொண்டிருந்தனர்.

"சண்டேஸ்வரரைச் சுற்றிவந்து வணங்கக்கூடாதே. இவர்கள் என்ன இப்படிச் செய்கிறார்கள்?" என அம்பிகை தவறைத் தடுக்கும் அவசரத்துடன் கூறினாள்.

"எம்பெருமானைத் தரிசித்து வழிபட்ட பலனைத் தந்தருளுமாறு வழிபாட்டின் இறுதியிலே சண்டேஸ்வரர் சந்நிதானத்திற்குச் சென்று வேண்டிக்கொள்ள வேண்டும். சண்டேஸ்வரர் எப்பொழுதும் மூலமூர்த்தியை வணங்கியவாறு தியானத்திலிப்பார். அதனால் ஈசனுக்கும் அவருக்குமிடையே குறுக்கீடு செய்யக்கூடாது என்பதற்காக அவரைச் சுற்றிவராமல் வழிபட்டபின் சென்ற வழியில் திரும்பிவரவேண்டும். அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு இவற்றையெல்லாம் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்றார் அம்மம்மா.

"கையை மூன்று தரம்தட்டி அவரிடம் வேண்டுதல் செய்யவேண்டும் இல்லையா அம்மம்மா" என கணாதிபன் கூறினான்.

"சண்டேஸ்வரரை வணங்கிய பின் நந்தியம்பெருமானிடம் சென்று வணங்க வேண்டும், வாருங்கள்" என அம்மம்மா அழைத்துச் சென்றார். நந்திதேவரை வணங்கியபின் பலிபீடத்திற்கு இந்தப் பக்கமாக வந்து நமஸ்காரம் செய்தனர்.

"வடக்குத் திசையைப் பார்த்து அமர்ந்துதான் தியானம் செய்யவேண்டும்" என்று அம்மம்மா அவர்களை நெறிப்படுத்தினார்.

"மூவரும் வடதிசையை நோக்கி அமர்ந்து கண்களை மூடி சிவபெருமானை நினைந்து பஞ்சாட்சர ஜெபம் செய்தனர்.

சிறிது நேரம் சிவபிரானைத் தியானித்த பின்னர் வீடு திரும்பினர். நடந்து வீட்டிற்குச் செல்லும்போது "வீட்டிலிருந்திருந்தால் இப்படி இருந்திருக்காது. இந்தச் காலை நேரத்தில் கோவிலுக்குப் போய் கும்பிட்டு வருவது மனத்திற்கு அற்புதமான உணர்வைத் தருகிறது" என்று அம்பிகை தனக்கேற்பட்டுள்ள இனிமையான அனுபவத்தை உணர்ந்து கூறினார்.

"அதுமட்டுமல்ல, உடலுக்குக்கூட நல்ல தேகப்பயிற்சி கிடைத்திருக்கிறது. இதைவிட அங்கப்பிரதட்சணம் செய்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்" என்று கணாதிபன் சொல்லவும் "அதுதான் வலம்வந்து வணங்கியபின் ஆறுதலாக ஓரிடத்திலிருந்து தியானம் செய்கிறோம். உடலும் மனமும் ஒன்றாக ஓய்வு காண்கின்றன" என்ற அம்மம்மாவின் கூற்றை அங்கீகரிப்பது போல் அந்தத் தியானம் ஆனந்த சுகானுபவம்" என்றாள் அம்பிகை.

காலையிலே சிவதரிசனம் செய்தால் இரவிலே செய்த பாவமும், மத்தியானம் செய்தால் பிறந்தநாள் முதலாகச் செய்த பாவமும் மாலையில் செய்தால் ஏழு பிறவிகளில் செய்த பாவமும் போய்விடும் என்று ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள்" என அம்மம்மா ஆலயதரிசன பலன் பற்றிக் கூறினார்.

"எல்லா விதத்திலும் ஆலய தரிசனம் மிகுந்த பயனுடையது" என்று அறுதியிட்டுக் கூறினான் கணாதிபன். மகிழ்வுடன் அவர்கள் வீடு சேர்ந்தனர்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமநாதன் தொடக்கிவைத்த அறக்கட்டளைகள்

**இலங்கையின் இந்து கல்வி வளர்ச்சியில் சேர் பொன் இராமநாதன் தொடக்கிவைத்த அறக்கட்டளைகள் முடக்கிய பங்கு வகித்தன. பரமேஸ்வரக் கல்லூரியை சேர்.பொன். இராமநாதன் அன்று கட்டிவைக்காவிட்டால் யாழ் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டி ருக்குமோ என்ற கேள்வி எழுகின்றது. இந்தக் கட்டுரையில் கல்விமான் ச. அம்பிகைபாகன் சேர் இராமநாதன் செய்த அரும்பணியைப் படம் பிடித்துக் காட்டுவதுடன் அவர் மரண சாசனத்தில் எழுதி வைத்ததையும் எடுத்துக் காட்டியுள்ளார்.**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிற் கொழும்பிற் குடியேறிய தமிழர் முகத்துவாரம், கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை முதலிய இடங்களில் வசித்தனர். அக்காலத்தில் கறுவாக்காடு முதலிய இடங்கள் குடிசனம் அதிகம் இல்லாத இடங்களாக இருந்தன. இதனாலேயே பொன்னம்பலவாணேஸ்வரா் கோயில் கொச்சிக்கடையில் தாபிக்கப்பட்டது.

சேர் பொன்னம்பலம் இராமநாதன் குடும்பத்திற்கு அத்திபாரமிட்டவர் ஆறுமுகம்பிள்ளை என்பவர். இவர் முகத்துவாரத்திற் போய்க் குடியேறியவர். அங்கு குடியேறிய பின்பு ஆங்கிலம் கற்ற இளைஞர்கட்குக் கொழும்பில் நல்ல வேலைவாய்ப்புக் கிடைப்பதைக் கண்டு தங்கள் ஊரான கெருடாவிலில் வசித்து வந்த தமது தம்பியாராகிய குமாரசுவாமியைக் கொழும்புக்கழைத்து ஆங்கிலம் கற்கவைத்தார். இவர் ஆங்கிலத்தைத் திறமையாகக் கற்று, முதலில் கோட்டு முதலியார் ஆகிய பின்பு பல உயர் பதவிகளை வகித்தார். இவர் ஒரு காலத்திற் கொழும்புத் தமிழர்களுக்கு ஒப்பற்ற தலைவராக விளங்கினார். குமாரசுவாமி முதலியார் விஜயலட்சுமி என்னும் பக்தையை மணந்தார். இவர்களுக்கு முத்துக்குமாரசுவாமி (பின்னர் சேர்) என்னும் ஆண் மகனும் செல்லாச்சி என்னும் மகளுந் தோன்றினர்.

மேலே சொல்லப்பட்ட செல்லாச்சியையே பொன்னம்பல முதலியார் விவாகஞ் செய்தார். பொன்னம்பலமுதலியார் அவருடைய சிறிய தந்தையாரால், கொழும்பில் தமது மைத்துனரான குமாரசுவாமி முதலியாருடையபாதுகாப்பிற் கல்வி கற்பதற்குக் கொழும்பிற்கனுப்பப் பெற்றவர். பொன்னம்பல முதலியாரும் ஆங்கிலம் செவ்வனே கற்று அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்துப் பின்னர் தனிப்பட்ட முறையில் வியாபாரத்தில் ஈடுபட்டார். காலகதியிற் பொன்னம்பல முதலியாருக்குஞ் செல்லாச்சிக்கும் விவாகம் நடைபெற்றது. செல்லாச்சியுடைய தாயாரைப் பற்றிக் குறிப்பிடுவது பொருத்தமாகும். செல்லாச்சியின் சகோதார் முத்துக் குமாரசுவாமி கடும் நோயவாய்ப்பட்டிருந்தபோது, தன் மகனுடைய நோய்குணப்பட்டால் தான் கால்நடையாக கதிர்காமத்திற்கு யாத்திரை செய்வதாக நேர்த்திக்கடன் செய்தார். மகனின் நோய் குணப்படவே தாயார் வாக்குப் பண்ணியபடி பாதை சரியில்லாத போதும் காட்டு மிருகங்கள் நிறைந்த பிரதேசத்துக்கூடாகக் கதிர்காமத்துக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத்திரை செய்தார். இதிலிருந்து இறைபக்தி இராமநாதன் குடும்பத்தில் ஆரம்பத்தில் இருந்தே வந்திருக்கிறதென்பது தெளிவாகிறது.

பொன்னம்பல முதலியாருக்கும் செல்லாச்சிக்கும் பிற்காலத்தில் அதிகம் புகழடைந்த குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் என்னும் மூன்றுகுழந்தைகள் தோன்றினர். இராமேஸ்வரஞ் சென்று வழிபாடு செய்ததன் பின் இரண்டாவது மகன் தோன்றியதால் அவருக்கு இராமநாதன் என்ற பெயர் வைத்தனர்.

பொன்னம்பல முதலியார் எவ்வளவு பெரும்பதவி வகித்த பொழுதும் இறைவழிபாட்டிற்கே முக்கிய இடங்கொடுத்தார். இதுபற்றி இராமநாதன் கூறுவது பின்வருமாறு "எனது தந்தையார் அக்காலத்துப் பிரமுகர்களில் ஒருவராக இருந்தபோதிலும் இறைபக்தியில் அதிகம் ஈடுபாடுடையவராக இருந்தார். தமது பூந்தோட்டத்தின் மத்தியில் தமது வழிபாட்டுக்கு ஒரு சிறு கோயிலை அமைத்தார். அத்தோட்டத்திற் பலவித பூமரங்களையுஞ் செடிகளையும் வளர்த்து வந்தார். இவை அவருடைய வழிபாட்டுக்கு வேண்டிய பூக்களைத் தினந்தோறுங் கொடுத்துவந்தன. மறுபிள்ளைகள் விளையாட்டுக்களில் ஈடுபட நான் ஒரு சுவருடன் சாய்ந்து கொண்டு அவர் செய்யும் வழிபாட்டையும் அவர் பாடுந் தோத்திரங்களையும் அவதானித்து வந்தேன்.

இவருடைய மனைவி பத்தொன்பதாவது வயதிற் காலமாகிவிட்டார். இதன் பிறகு இவருக்கு இயற்கையாக இருந்த இறைபக்தி உச்சநிலை அடைந்தது. அக்காலத்தில் வடகொழும்பிற் சைவர் வழிபடுவதற்கு ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஒரு கோயில் இல்லாத குறையைக் கண்டு மனம் வருந்தி அதை நிவர்த்திசெய்யத் தீர்மானித்தார். இதன் பொருட்டுக் கொச்சிக்கடையில் கோயில் அமைக்க நிலம் வாங்கினர். அந்த நிலத்தில் சுயமாக பெருந்தொகைப் பணம் செலவு செய்து பொன்னம்பலவாணேசர் கோயிலை நிறுவினார்.

இக்கோயில் 1856ஆம் ஆண்டிற் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இக்கோயிலுக்குப் பணக்கஷ்டம் ஏற்படலாகாது எனக் கருதி ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஓர் தென்னந் தோட்டத்தையுஞ் சில கட்டிடங்களையும் வாங்கிவிட்டார். இக்கோயிலைக் கொண்டு நடத்துவதற்கு ஓர் உறுதி முடித்து வைத்தார். அதன்படி குடும்பத்தில் மூத்த ஆண்மகனே கோயிலை நடாத்தும் உரிமை பெற்றார்.

பொன்னம்பல முதலியார் இறந்த பின்பு அவருடைய மூத்தமகன் குமாரசுவாமி முதலியார் சிறிது காலங் கோயிலை நடத்தி வந்தார். இவர் 1905ஆம் ஆண்டு இறக்கவே இராமநாதன் அந்தப் பொறுப்பை ஏற்றார். இராமநாதனிடத்தில் தகப்பனாரின் இறைபக்தி முழுதுங் குடிகொண்டிருந்தது. அவர் வேத ஆகமங்கள், மெய்கண்ட சாஸ்திரங்கள், திருமுறைகள் முதலியவற்றைத் திறம்படக் கற்றிருந்தார். தகப்பனார் கட்டிய கோயில் புனருத்தாரணஞ் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. தகப்பனார் கோயிலைச் செங்கற்களாற் கட்டி இருந்தார். இராமநாதன் எப்பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கக்கூடிய கருங்கல்லாற் கட்டத் தீர்மானித்தார். இதனைக் கேள்விப்பட்ட தம்பியார் அருணாசலம் இராமநாதனின் மூத்தமகன் வாமதேவாவிற்குப் பின்வருமாறு கூறினார். "உமது தகப்பனாருக்கு விசர்; கருங்கல் திருப்பணி செய்பவர்கள் அரசர்களும் அவர் போன்றவருமே என "மதுரை மீனாட்சிஅ ம்மன் கோயில் போன்ற கோயில்கள் ஒரு மனிதராலோ அல்லது ஒரு வருடத்திலோ கட்டிமுடிக்கப்பட்டதில்லை. அக்கோயிலை ஒரு பாண்டிய மன்னன் கட்டத் தொடங்கினான். அதை நாயக்கர் மன்னர் கட்டி முடித்தனர். நாம் தொடங்குங் கோயிலைக் கட்டி முடிப்பது உனதும், உனது தந்தையாரதும் கடமை ஆகுமென" இந்தப் பொறுப்பை விடாமல் தாமே கட்டி முடித்ததை இனிக் கவனிப்பாம்.

புதுக்கோயில் அமைக்கத் தொடங்குமுன் பழங்கோயில் முழுவதும் இடிக்கப்பட்டது கோயில் அமைக்கத் தொடங்குமுன் சிற்ப நூல்களை நன்கு ஆராய்ந்து கோயிற் கட்டக்கலை பற்றிய விஷயங்களை நன்கு அறிந்து கொண்டார். இவ்வறிவு கோயிலை நிர்மானிப்பதற்குஞ் சிற்பிகளின் வேலைகளை மேற்பார்வை செய்வதற்கும் அவசியந் தேவைப்பட்டது. கலாயோகி ஆனந்த குமாரசுவாமி கோயிற் கட்டிடக்கலை பற்றித் தமக்கு ஏற்பட்ட சந்தேகத்தைக் கடிதம் மூலம் இவரிடம் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொண்டார்.

கோயில் கட்டத் தீர்மானித்தும் தென்னிந்தியா சென்று தென்னிந்திய சிற்பக்கலையில் தேர்ந்தவர்களை அழைத்துவந்தார். அவர்களுக்கு பின்வரும் புத்திமதியைக் கூறினார். "நீங்கள் சிவனுக்கு கோயில் அமைக்கப் போகின்றீர். ஆகவே பயபக்தியோடு உங்கள் முழு ஆற்றலையும் இதற்கு உபயோகிக்கவேண்டும் என." கோயிற் கட்டிடவேலை 1907ம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதற்குரிய கற்கள் வியாங்கொடையில் இருந்து வெட்டிக் கொண்டுவரப்பட்டன. ஒவ்வொரு தூணும் திராவிடச் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. அதுபோலவே மறுவேலைகளும் வேலை செய்துகொண்டு போகும்பொழுது ஏதும் பிழை ஏற்பட்டால் அந்தக் கல்லை விலக்கிவிட்டுப் புதுக்க ஆரம்பிக்கவேண்டும். இது பற்றிச் சேர் இராமநாதன் மிகவும் கண்டிப்பாக இருந்தார். பல்வேறு மண்டபங்களும் பரிவாரக் கோயில்களும் சிறப்பாகக் கருங்கல்லால் அமைக்கப்பட்டன. இந்த வேலை நிறைவேறுவதற்கு ஆறு வருடங்கள் எடுத்தன. கோயிற் கும்பாபிஷேகம் 1912ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கட்டிட வேலைக்கு வேண்டிய பணம் தகப்பனார் விட்ட மானியத்திலிருந்தும், சேர். இராமநாதன் உழைப்பிலிருந்தும் பெறப்பட்டது. இதற்குச் சேர் இராமநாதனின் சம்பாத்தியமே அதிகஞ் சேர்ந்தது. இத் திருப்பணி அக்காலத்தின் பெறுமதிப்படி இருபது லட்சம் ரூபாய் வரையிற் செலவிடப்பெற்றது.

பூசகர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகளும் அமைத்துக் கொடுத்தார். கோயில் நித்திய பூசைகள் நடப்பதற்கு யாதொரு குறைவும் இல்லாமல் வேண்டியவற்றை எல்லாம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமநாதன் கல்லூரி

ஆறுமுக நாவலர் அவர்களே சைவமுந் தமிழும் மறுமலர்ச்சி பெறுவதற்கு உழைத்தவர். அவர் தமக்குப் பின் இத்தொண்டுகளைத் திறம்பட செய்வரென்று கருதியே அவர் இராமநாதனைத் தமிழர் பிரதிநிதியாக நியமிப்பதற்கும் பகீரதப் பிரயத்தனஞ் செய்தார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. சேர் பொன் இராமநாதன் தாமாகவே இரு கல்லூரிகளைத் தாபித்ததோடு, சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முதல் தலைவராகவும் இருந்தார்.

இவர் "சொல்சிற்றர் ஜெனரல்" பதவியிலிருந்து இளைப்பாறிய பின்பு கல்வி வளர்ச்சியிலேயே தமது காலத்தைக் கழிக்க விரும்பினார். கல்வியே ஒரு மனிதனைப் பண்புள்ளவனாக்குவதற்குச் சிறந்த சாதனம் எனக் கருதினார். இவர் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது அமெரிக்காவில் இருந்து பலர் அங்கு வந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறு வற்புறுத்திக் கேட்டனர். பலர் கேட்டபடியால் அழைப்பை மறுக்க முடியவில்லை. 1905ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குப் பிரயாணமாயினார். அப்பொழுது பிரயாணத்தை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பி, யாழ்ப்பாணம் வந்தபொழுது சைவப் பெண்களுக்கு யாழ்ப்பாணத்திற் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறினார். கிறிஸ்தவ கல்லூரிகளிற் படிக்கும் பெண் பிள்ளைகள் மதம் மாற்றப்படுவதோடு சைவத்தமிழ்ப் பண்புக்கு மாறாக வளர்க்கப்படுவதையும் எடுத்துக் காட்டினார்.

தாம் கூறிய உண்மைகளை உணர்ந்து ஒரு சைவமகளிர் கல்லூரி தாபிக்க தீர்மானித்தார். தீர்மானித்ததும் இதற்கு வேண்டிய நிலத்தை தேடத் தொடங்கினார். முதலில் கோப்பாயில் இருபத்தைந்தேக்கர் நிலத்தை வாங்கினார். ஆனால் அவ்விடம் போக்குவரவு வசதிக்கு உகந்ததாய் இருக்காதபடியால் வேறு இடத்தைத் தேடினார். கோப்பாயில் இவர் வாங்கிய நிலத்தில் ஒரு பகுதியிலேயே அரசினர் ஆசிரியர் கல்லூரி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பின்னர், சுன்னாகத்திற் பல வீதிகள் சந்திக்கும் இடத்தில் 25 ஏக்கர் நிலத்தை வாங்கினார். இப்பூமி குமரகுரு சுவாமிகள் போன்ற ஞானிகளின் பாதம்பட்ட புனித பூமியாகும். இக் கல்லூரியை, சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பண்ணையாக்க விரும்பினார். இதற்காக சாதாரண பாடங்களோடு இதிகாச புராணங்களையும் கற்பிக்க ஒழுங்கு செய்தார். இசைப்பயிற்சிக்கும் இடம் வகுத்தார். தினசரி மாணவர் படிக்கவேண்டிய தேவாரத்தையும் இசைப் பகுதியையுஞ் சேர்த்து ஒரு கைந்நூலாக வெளியிட்டார். பண்ணை முறையாகப் படிப்பிக்க ஓர் ஆசிரியையும் நியமித்தார். பிள்ளைகளின் தினசரி வழிபாட்டுக்கென ஒரு கோயில் அமைத்து நடராசரையும் சிவகாமியையும் பிரதிட்டை செய்தார். அர்ச்சகர் ஒருவரை நியமித்து அவருக்குச் சம்பளம் கிரமமாகக் கொடுக்க ஒழுங்கு செய்தார். கல்லூரியைப் பரிபாலனஞ் செய்வதற்கும் தமது குடும்பத்தைச் சேர்ந்த சிலரை நியமித்தார். சில தென்னந் தோட்டங்களின் வருமானத்தையும் கல்லூரிக்கு விட்டதாகத் தெரிகிறது. பள்ளிக்கூடத்திற்கு அவர் இட்ட இலச்சினை "திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்" என்பதிலிருந்து அவரது உயர்ந்த நோக்கை நாம் அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமேஸ்வராக் கல்லூரி

ஒரு காலத்தில் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் ஒற்றுமை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, கொழும்பில் ஒரு பௌத்த இந்துக் கல்லூரி தாபிக்க முயன்றார். இதற்காக ரூபா 25,000/– முற்பணமாகக் கொடுக்கவும் முன்வந்தார். நல்லவேளையாக நிர்வாகத்தில் ஏற்பட்ட கருத்து வேற்றுமையால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

1920ஆம் ஆண்டிற் கீரிமலையில் நடைபெற்ற இந்து இளைஞர் மகாநாட்டில் ஆண்களுக்கென ஒரு கல்லூரியை நிறுவும்படி மக்கள் கேட்டனர். இந்தக் கல்லூரியை நிறுவுவதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்படும் எனத் தெரிந்தும் அவர்கள் கோரிக்கைக்கு உடன்பட்டுவிட்டார்.

இக்கல்லூரியைக் கொண்டுநடத்துவதற்கு ஒரு சட்டத்தை நிறைவேற்று வதற்குச் சட்டநிரூபண சபையில் ஒரு பிரேரணையாக கொணர்ந்தார். இப்பிரேரணை சம்பந்தமாக அவர் ஆற்றிய நீண்ட சொற்பொழிவு அவருடைய கல்வி பற்றிய கொள்கைகள் நன்கு விளங்குகிறது. பரமேஸ்வரக் கல்லூரிக்கெனத் திருநெல்வேலியில் 25 ஏக்கர் நிலம் வாங்கினார். இக்கல்லூரி காலகதியில் ஒரு சர்வகலாசாலையாக வரவேண்டும் என்னும் எண்ணத்தோடு திட்டங்கள் வகுத்தார். கட்டிடத்திற்கு அவர் போட்ட திட்டத்தில் ஒரு பகுதியே நிறைவேறியது. இக்கல்லூரிக்கு அவர்விட்ட நன்கொடைகளில் தனலக்குமி தோட்டத்தை (250 ஏக்கர் விஸ்தீரனமானது) இராமநாதன் பரிபாலன சபையார் நிர்வகித்து வருகின்றார். இந்த நன்கொடை பரமேஸ்வரன் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அவருடைய மரண சாசனத்தில் பரமேஸ்வரக் கல்லூரிப் பரிபாலன சபைக்குக் கூறியிருப்பது "பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நான் இந்த நன்கொடையைக் கொண்டு சைவப் பிள்ளைகளைச் சைவசாத்திரங்களையும், தமிழ்க் கல்வியையும் இசையையும் பேணவேண்டும். வாய்ப்பாட்டும் இசைக் கருவிகளும் போதிக்கப்பட வேண்டும். இசை சம்பந்தமாக மாணிக்கவாசக சுவாமிகள், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரர், தாயுமான சுவாமிகள் முதலியோரின் பாடல்களுக்குப் பிரதான இடங்கொடுக்கப்படவேண்டும். இந்த நன்கொடையால் வரும் பணத்தை இராமநாதன் கல்லூரிப் பரிபாலன சபையாரும், பரமேஸ்வரக் கல்லூரி பரிபாலன சபையாரும் இக்கல்லூரிகளின் நோக்கங்களை நிறைவேற்ற உபயோகப்படுத்த வேண்டும்.

பரமேஸ்வராக் கல்லூரியைக் கட்டிமுடிப்பதற்கு போதிய பணம் அவரிடம் இல்லாதபடியால் தான் கொழும்பில் வசித்த வீட்டை (சுகஸ்தான்) 50,000/– ரூபாவுக்கு ஈடுவைத்தார். இவ் ஈடு அவர் காலத்திலோ, பின்னரோ மீளப்படவில்லை. அவருடைய அரும்பெரும் நூல் நிலையத்தையும் பரமேஸ்வரக் கல்லூரிக்கு நன்கொடையாகக் கொடுத்தார். அதுவும் கவனிப்பாரின்றிச் சிதைந்து போய்விட்டது. நல்லவேளையாக பரமேஸ்வரக் கல்லூரி யாழ்ப்பாணத்தின் சர்வகலாசாலையாக மாறிவிட்டது. இதனால் அவருடைய புகழ் வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
# கைலாயவாகனத் திருவிழா 31-08-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தென்திசைக் கோபுரம்

Print Master. T.P. 021-205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org